வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 08.03.2025 சனிக்கிழமை | இதழ் : 68 | பக்கங்கள் : 12




# வடக்கில் தொழிற்சாலைகளை மீள இயக்குவது குறித்து ஆராய்வு


## காங்கேசன், பரந்தனில் அமைச்சர்கள் குழு நேரில் ஆராய்ந்தது

யாழ்ப்பாணம், மார்ச் 08

**காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை, பரந்தன் இரசாயன தொழிற்சாலைகளை மீள இயக்குவது தொடர்பில் அமைச்சர்கள் குழு நேற்று நேரில் ஆராய்ந்தது.**

அத்துடன், ஆனையிறவு உப்பு உற்பத்தி நிலையம், அச்சுவேலி கைத்தொழில் பேட்டை என்பவற்றையும் நேரில் பார்த்து அங்கு முன்னெடுக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடியது.

கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி, கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் ஹர்ஷன சூரியப்பெரும ஆகியோர் கொண்ட குழுவினரே நேற்று 11





## கடன் மறுசீரமைப்பு திட்டம் ஜப்பானுடன் புரிந்துணர்வு!

கொழும்பு, மார்ச் 08

வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பில் ஜப்பானுடன் இலங்கை புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது. இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் 250 கோடி டொலர்கள் கடனுக்கு ஜப்பான் சலுகை வழங்கியுள்ளது.

நேற்று வெள்ளிக்கிழமை நிதி அமைச்சின் தலைமையகத்தில் கைச்சாத்தானது. இதில், நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்த்தன, 11

## கல்வித்துறை நெருக்கடிகளுக்கு அரசியல் தலையீடும் காரணம்

### பிரதமர் ஹரிணி அமரசூரிய

கொழும்பு, மார்ச் 08

கல்வித்துறையில் உருவாகியுள்ள பல நெருக்கடிகளுக்கு கல்வி கொள்கைகள் முறையாக அமுல்படுத்தாமையும் அரசியல் தலையீடுகளுமே காரணம் என்று பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை கல்வி, உயர்கல்வி மற்றும் தொழில்கல்வி அமைச்சின் ஆலோசனைக் குழுவின் முதலாவது கூட்டத்தொடர் நடைபெற்றது. இதன்போது எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார். 11

## யாழ். - திருச்சி விமான சேவை; வசதிகளை ஒழுங்குபடுத்துக!

### ரவூப் ஹக்கீம் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 08

யாழ்ப்பாணம் - திருச்சி விமான சேவை இந்த மாதம் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் அதற்கான வசதிகள் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், திருச்சியில் இருந்து பலாலி செல்வதற்கான விமான சேவை இந்த மாதம் ஆரம்பிக்கப்படுகிறது. இது தொடர்பான அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்படவேண்டும். 11

### யானைகளின் மரணத்தை தவிர்க்க

## கிழக்கு ரயில் சேவைகளின் நேர அட்டவணையில் மாற்றம்

மட்டக்களப்பு, மார்ச் 08

கிழக்கு ரயில் மார்க்கத்தில் காட்டு யானைகள் ரயிலுடன் மோதுண்டு உயிரிழப்பதைத் தவிர்க்க புதிய நேர நடைமுறைகள் நேற்று முதல் அறிமுகமாகின.

இதன்படி, மட்டக்களப்பில் இருந்து காலை 6.15 மணிக்கு புறப்படும் பாடும்மீன் கடுகதி ரயில் பிற்பகல் 3.30 மணிக்கு கொழும்பை அடையும்.

மட்டக்களப்பில் இருந்து நள்ளிரவு 1.30 மணிக்கு புறப்படும் புலத்தசி ரயில் சேவை புறப்பட்டு கொழும்பை மறுநாள் முற்பகல் 10 மணியளவில் அடையும். 11

## ரணிலின் தொங்கு பாலத்திலேயே இந்த அரசாங்கம் பயணிக்கிறது!

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

கொழும்பு, மார்ச் 08

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ரணிலின் தொங்கு பாலத்திலேயே பயணிக்கிறது - இவ்வாறு விமர்சித்துள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

ஐக்கிய ஊழியர் சங்கத்தின் பிரதிநிதிகளுடன் நேற்று வெள்ளிக்கிழமை நடத்திய சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"கடந்த அரசாங்கம் பயணித்த தொங்கு பாலத்திலேயே இந்த அரசாங்கமும் பயணிக்கிறது. அதே வழிமுறைகளையே பின்பற்றி வருகிறது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் முதன்மை செலவை 13 சதவீதமாக மாற்றியுள்ளனர். 11

## ரணிலை பாராளுமன்றில் எள்ளிநகையாடிய பிமல்!

கொழும்பு, மார்ச் 08

பெராரி ஓட்டுநர் உரிமம் இருப்பதாகக் கூறியவர் அல் ஜசீராவுடன் மோதி சேதத்துக்கு உள்ளானார். அவரின் மூளைக்கு பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது - இவ்வாறு பாராளுமன்ற சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை எள்ளிநகையாடினார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை 2025 வரவு - செலவு திட்டத்தில் போக்குவரத்து அமைச்சுக்கான ஒதுக்கீடு மீதான விவாதத்தில் உரையாற்றிய அவர், 11

## மின் தடைக்கு சூரிய மின்சக்தி கட்டமைப்புகள் காரணமல்ல!

### சூரிய மின்சக்தி தொழில்துறை சங்கம்

கொழும்பு, மார்ச் 08

கடந்த பெப்ரவரி 9ஆம் திகதி நாடு முழுவதும் மின் தடை ஏற்பட்டமைக்கு காரணம் "சூரிய மின்சக்தி கட்டமைப்புகளே" என்ற இலங்கை மின்சார சபையின் குற்றச்சாட்டுகளை நிராகரிப்பதாக சூரிய மின்சக்தி தொழில்துறை சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் விளக்கமளிக்கும் செய்தியாளர் சந்திப்பு நேற்று கொழும்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதன்போது கருத்து தெரிவித்த சங்கத்தின் தலைவர் ஜாவித் காமில் - 11

## பெண் உரிமைகளை மதித்தால் சமூக மாற்றம் தானாக ஏற்படும்

### வடக்கு ஆளுநர் வேதநாயகன்

யாழ்ப்பாணம், மார்ச் 08

பெண்களின் உரிமைகளை மதிப்பதற்கு ஒவ்வொருவரும் தயாரானால் சமூக மாற்றம் தானாகவே ஏற்படும் - என்று வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண அமைச்சின் சர்வதேச மகளிர் தின விழா நேற்று சாவகச்சேரியில் நடைபெற்றது. இதில் பங்கேற்று பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பெண்களுக்கு எதிரான துர்நடத்தைகளில் ஈடுபடுபவர்களும் வன்முறைகளில் ஈடுபடுபவர்களும் சட்டத்தின் பிடியில் 11

## படைகளின் பிடியிலுள்ள மாவீரர் துயிலுமில்லங்களை விடுவிக்குக!

### ரவிகரன் எம். பி. கோரிக்கை


கொழும்பு, மார்ச் 08

மாவீரர்களின் உறவுகளும் - தமிழ் மக்களும் மாவீரர் களை விதைத்த இடத்தில் கண்ணீர் சிந்தி நினைவு கூருவதற்காக வடக்கு, கிழக்கில் இராணுவத்தின் பிடியிலுள்ள மாவீரர் துயிலுமில்லங்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ் அரசுக் கட்சியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் து. ரவிகரன் கோரியுள்ளார்.

நேற்றைய தினம் பாராளுமன்றில் உரையாற்றிய அவர் அமைச்சர் பிமல் ரத்நாயக்கவிடமும் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார். 11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடக்கின் பெரும் போர்:

## யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி தொடர்ந்தும் வலுவான நிலை!

யாழ்ப்பாணம், மார்ச் 07

வடக்கின் பெரும் போர் துடுப்பாட்டப் போட்டியில் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி தொடர்ந்தும் வலுவான நிலையில் உள்ளது. தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் யாழ். மத்திய கல்லூரி அணி இன்னமும் 2 விக்கெட்களே கைவசமுள்ள நிலையில் 85 ஓட்டங்களே முன்னிலையில் உள்ளது.

118ஆவது வடக்கின் பெரும் போர் பெருந்துடுப்பாட்ட போட்டி நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி 57.2 ஓவர்களில் 131 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

பதிலுக்குத் தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த சென். ஜோன்ஸ் கல்லூரி முதல்நாள் ஆட்டம் நிறைவில் 3 விக்கெட்களை மட்டும் இழந்து 103 ஓட்டங்களைப் பெற்றது. அனுசாந் 49 ஓட்டங்களுடனும் அஷ்னாத் 29 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்று இரண்டாம் நாளில் அனுசாந், அஷ்னாத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடினர். ஆட்டம் தொடங்கிய சிறிது நேரத்திலேயே அஷ்னாத் மேலதிகமாக எந்த ஓட்டத்தையும் பெறாமலே ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த ரன்யோ நிதானம் காட்ட மறுமுனையில் அரைச்சதத்தைப் பூர்த்தி செய்த அனுசாந் அதிரடி காட்டினார். 157 பந்துகளை சந்தித்து 10 பௌண்ட்ரிகள், 2 சிக்கஸர்களுடன் 86 ஓட்டங்களைக் குவித்து அனுசாந் ஆட்டமிழந்தார்.

பின்னர் வந்தவர்களில் ரன்யோ 20, சஞ்சுதன் 22, கிரிசன் 0, ஜோன் நதீனியா 0, ஜோன் ஆர்னோல்ட் 11, சஞ்சய் 2, மாதுளன் 1 என ஆட்டமிழக்கவே 66 ஓவர்கள் நிறைவில் சென். ஜோன்ஸ் கல்லூரி அனைத்து விக்கெட்களையும் இழந்து 181 ஓட்டங்களைப் பெற்றது.

யாழ். மத்திய கல்லூரியின் பந்துவீச்சில் நியூட்டன் 5 விக்கெட்களையும் தீசன் 2 விக்கெட்களையும் அபிலாஷ் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

நேற்றைய நாளில் தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடியது யாழ். மத்திய கல்லூரி.

தொடக்கம் கொடுத்த நியூட்டன் 4, தீசன் 2, கார்த்திகன் 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

நான்காவது வீரராக களமிறங்கிய சிமில்ரன் 2 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்களுடன் 34 ஓட்டங்களை எடுத்தார். மதுசுதன் 17, அபிலாஷ் 28, தீசன் 16, அபிசேக் 5 ஓட்டங்களுடன் விக்கெட்களை இழந்தனர்.


நேற்றைய நாளில் 54 ஓவர்களை எதிர்கொண்ட யாழ். மத்திய கல்லூரி அணி 8 விக்கெட்களை இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றது. பருதி, நவிந்தன் ஆகியோர் தலா 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

சென். ஜோன்ஸ் கல்லூரியின் பந்துவீச்சில் அஷ்னாத் 3, மாதுளன் 2 விக்கெட்களையும் ரன்யோ, அபிஜோய்சாந் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இன்று போட்டியின் மூன்றாம் மற்றும் இறுதிநாள் ஆட்டமாகும். (ஐ)

பொன் அணிகளின் போர்:

## வட்டு. யாழ்ப்பாண கல்லூரி 2ஆம் நாளிலும் தடுமாற்றம்!



யாழ்ப்பாணம், மார்ச் 08

பொன் அணிகளின் போரில் இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரி அணி 69 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களை இழந்து தடுமாறி வருகின்றது.

108ஆவது பொன் அணிகளின் போர் பெருந்துடுப்பாட்டம் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாண கல்லூரி அணி முதல் இன்னிங்ஸில் 153 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் தனது முதல் இன்னிங்ஸில் ஆடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி 19 ஓவர்களில் 2 விக்கெட்கள் இழப்புக்கு 50 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் முதல் நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது.

நேற்றைய தினம் இரண்டாவது நாள் ஆட்டம் ஆரம்பமானது. அந்த அணியின் ஆதித்யா 21 ஓட்டங்களுடனும் அபிலாஷ் 14 ஓட்டங்களுடனும் ஆட்டத்தைத் தொடர்ந்தனர்.

ஆதித்யா மேலதிகமாக 6 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் மதுசனின் பந்தில் ஹர்மிசனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். மறுமுனையில் நிதானித்து ஆடிய அபிலாஷ் 28 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

இதனிடையே, ஜோஜேஸ் 12, சியான்சன் 0, சாருசன் 1, மதுசன் 10 என சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

பின்வரிசை வீரர்களான பிரியங்கன் 23 (ஆட்டமிழக்காமல்), பி. மதுசன் 20 ஓட்டங்களை அபாரமாக ஆடிப் பெற்றனர்.

65.3 ஓவர்களில் சென். பற்றிக்ஸ் கல்லூரி சகல விக்கெட்களையும் இழந்து 167 ஓட்டங்களைப் பெற்றது. இதன் மூலம் யாழ்ப்பாண கல்லூரி அணியை விட 14 ஓட்டங்கள் முன்னிலை பெற்றது.

யாழ்ப்பாண கல்லூரியின் பந்துவீச்சில் எஸ். மதுசன் 5 விக்கெட்களையும் விஷ்ணுகோபன், ஹமிஸ் ஹர்மிசன் ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் வீழ்த்தினர்.

தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரி 69 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களை இழந்து தடுமாறி வருகிறது.

தொடக்கம் கொடுத்த ஜோன்சன் 4, எமக்ஸன் 0, ஹரிசன் 9, விஷ்ணுகோபன் 13, டேமியன் 10 என சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

44 ஓவர்கள் நிறைவில் அந்த அணி 5 விக்கெட்கள் இழப்புக்கு 69 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஹார்மிசன் 15, எஸ். மதுசன் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியின் பந்துவீச்சில் பி. மதுசன், சாருசன் ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் அபிலாஷ் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இன்று போட்டியின் மூன்றாவது மற்றும் இறுதி நாள் ஆட்டமாகும். (ஐ)

## சுற்றுலாத்துறையில் ஈடுபடும் நபர்களுக்கு காப்புறுதி திட்டம்

கொழும்பு, மார்ச் 08

சுற்றுலாத்துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு, இந்த ஆண்டு முதல் பங்களிப்பு ஓய்வூதிய முறையொன்று அறிமுகப்படுத்தப்படவுள்ள தாக சுற்றுலாத்துறை பிரதி அமைச்சர் ருவன் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், சுற்றுலாத்துறையில் ஈடுபடுபவர்களுக்கான சமூக நலத்திட்டமொன்றையும் முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

பாராளுமன்றத்தில், எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரால் எழுப்பபப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சுற்றுலாத்துறையின் எதிர்காலத்துக்காக 100 சுற்றுலாத் தலங்கள் தற்போது அடையாளம் காணப்பட்டு வருகின்றன. அதன் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கு ஒவ்வொரு தலத்திற்கும் சுமார் 10 மில்லியன் ரூபா ஒதுக்கப்படும்.

மேலும், சுற்றுலாப் பயணிகளுக்காக ஓய்வு மையங்களை நிர்மாணிக்க அரசாங்கம் தற்போது முடிவு செய்துள்ளது - என்றார். (அ)







பண்டத்தரிப்பு - வடலியடைப்பு - அரசடி - புற்றடி ஆதிசங்கரி சமேத ஆதிசங்கரன் ஆலய பூங்காவன திருவிழாவில் சுவாமி எழுந்தருள்வதையும் ஆலய சூழலில் நடந்த மாணவர்களின் கலைநிகழ்வையும் படங்களில் காணலாம்.

## பயிற்சி பட்டறை

யாழ்ப்பாணம், மார்ச் 08

யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை, தமிழியற் கழகம் நடத்தும் கவிதைப் பயிற்சிப் பட்டறை நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடக் கருத்தரங்கு மண்டபத்தில் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் கி. விசாகரூபன் தலைமையில் இந்தப் பயிற்சிப் பட்டறை நடைபெறவுள்ளது.

இதில், சோ. பத்மநாதன், பா. அகிலன், சி. ரமேஷ், இ. சு. முரளிதரன், ந. மயூரரூபன் ஆகியோர் வளவாளர்களாக பங்கேற்பர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu — ஈළනාඩු
08.03.2025 சனிக்கிழமை
பிலவ வருடம், மாசி 24

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## ரணில் - 'ஆனைக்கும் அடி சறுக்கும்'

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியலில் பழுத்தவர். சர்வதேச விவகாரங்களை எதிர்கொள்வதில் இலங்கையில் எவருடனும் ஒப்பிட முடியாதவர் என்று கருதப்படுபவர். சர்வதேச ரீதியில் இலங்கையின் புத்திஜீவி அரசியல்வாதி என்றால் அனைவருக்கும் உடன் நினைவுக்கு வருபவர் ரணில் விக்கிரமசிங்கதான். ஆனால், அல் ஜசீராவில் அவர் பங்குகொண்ட 'நேருக்கு நேர்' நேர்காணல் ரணில் தொடர்பான அரசியல் விம்பங்களை தகர்ப்பதாக அமைந்திருக்கிறது. ஓர் இளம் ஊடகவியலாளரின் கேள்விகளை எதிர்கொள்வதில் ரணிலிடம் பதற்றம் தெரிந்தது. ஒருவேளை வயது கூடிவிட்டதால் ரணில் முன்னைய நிதானத்தை இழந்தும் போயிருக்கலாம் அல்லது அவரது அலட்சிய மனோநிலையாலும் இது நிகழ்ந்திருக்கலாம்.

கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரத்திலிருந்து அகற்றப்பட்ட நிலையில் சடுதியாக ஜனாதிபதியானவர்தான் ரணில் விக்கிரமசிங்க. ஒரு தனிமனிதராகப் பாராளுமன்றத்துக்குள் பிரவேசித்த ரணில் பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற ஆதரவில் முற்றிலுமாகத் தங்கியிருக்க வேண்டியிருந்தது. ஒருபுறம் ராஜபக்ஷக்களை பாதுகாக்கும் பணியையும் அவர் செய்தார். முக்கியமாக கோட்டாபய ராஜபக்ஷவின் வேண்டுகோளுக்கு அமைவாகவும் சில விடயங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது. உதாரணமாக அலி சப்ரி வெளிநாட்டு அமைச்சராக நியமிக்கப்பட்டமையும் அவ்வாறான ஒன்றுதான். ராஜபக்ஷக்கள் மூலம் தன்னுடைய இருப்பை உறுதிப்படுத்திக் கொண்டு, மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றும் ஆட்டத்தை ஆடினார்.

ஆனால், அவாரால் சிங்கள மக்கள் மத்தியில் செல்வாக்கைப் பெற முடியவில்லை. சாதாரணமாகத் தமிழர்கள் மத்தியில் ரணில் தொடர்பில் இருந்த அபிப்பிராயமளவுக்குக்கூட, சிங்கள மக்கள் அவரைக் கண்டுகொள்ளவில்லை. இந்த நிலையில் ரணில் விக்கிரமசிங்கவின் ஜனாதிபதி பதவிக் காலத்தில் ஈழத்தமிழ் மக்களின் கரிசனைகளில் அவர் எந்தவொரு முன்னேற்றத்தையும் காண்பிக்கவில்லை. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையை எதிர்கொள்ளும் விடயத்தில் பொதுஜன பெரமுனவின் முன்னைய கொள்கை நிலைப்பாட்டை வழிமொழிபவராகவே இருந்தார். 2015 ஆட்சி மாற்றத்தின் பின்னர் எவற்றையெல்லாம் ஆதரித்துப் பேசினாரோ - பின்னர் தலைகீழாகத் தெரிந்தார் - அவற்றுக்கு எதிரான நிலைப்பாடுடையவராகத் தன்னைக் காண்பித்துக் கொண்டார்.

இவ்வாறானதொரு பின்புலத்தில் சர்வதேச ஊடகமென்றில் - அதிலும் குறிப்பாக புலம்பெயர் தமிழர்கள் வாழும் பகுதியொன்றில் இவ்வாறானதொரு நிகழ்வில் எந்தத் துணிவில் அவர் பங்குகொண்டார்? ஏனெனில், அவர் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் எதனையும் செய்யாத நிலையில் கேள்விகளுக்குப் பதிலளிப்பது கடினமானது. இதனை ரணில் முன்னரே கணித்துச் செயல்பட்டிருக்க வேண்டும்.

ரணில் விக்கிரமசிங்க தொடர்பில் தமிழ் மக்கள் மத்தியில் ஒப்பீட்டடிப்படையில் அபிப்பிராயம் இருந்திருக்கிறது. ரணிலுடன் சில விடயங்களை பேசலாம் - என்னும் கணிப்பும் இருந்திருக்கிறது. ஆனால், அண்மைக்காலமாக அவரின் கருத்துகளைப் பார்க்கும போது, ரணிலையும் தென்னிலங்கையின் சராசரி அரசியல்வாதிகளின் வரிசையில் வைத்து நோக்க வேண்டிய நிலையை ஏற்படுத்தியிருக்கிறது.

என்னதான் கெட்டித்தனம் இருந்தாலும் 'ஆனைக்கும் அடி சறுக்கும்' என்பது மட்டுமே உண்மை.

## குடும்ப பெண்ணை மிரட்டி வன்புணர்ந்தவர் கைது!

*வவுனியா, மார்ச் 08*

குடும்பப் பெண் ஒருவரை மிரட்டி வன்புணர்வுக்கு உட்படுத்தியவரை வவுனியா மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸார் நேற்று வெள்ளிக்கிழமை கைது செய்தனர்.

வவுனியா - பம்பை மடுவை சேர்ந்த 31 வயது குடும்ப பெண்ணையே 37 வயதான நபர் மிரட்டி தொடர்ச்சியாக வன்புணர்வுக்கு உட்படுத்தி வந்துள்ளார்.

கடந்த 2023 ஜூன் மாதம் குறித்த பெண்ணை தனது வீட்டுக்கு அழைத்த குடும்பஸ்தர் அவரை மிரட்டி வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளார். அத்துடன், அதனை காணொலியாக பதிவு செய்து, அந்தக் காணொலியை வெளியிடுவேன் என்று மிரட்டி பல தடவைகள் வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளார்.

இதனால், கர்ப்பமான பெண், குழந்தை ஒன்றை பிரசவித்துள்ளார். இந்தநிலையில் கடந்த ஆண்டு டிசெம்பர் 27ஆம் திகதி பாதிக்கப்பட்ட பெண் பூவரசன்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்திருந்தார். எனினும், சந்தேகநபர் தலைமறைவாகியிருந்தார்.

இந்தநிலையில், சந்தேக நபர் முள்ளியவளையில் மறைந்திருந்த நிலையில் வவுனியா குற்றத்தடுப்பு பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை வவுனியா நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ-10)

## சந்நிதியான் ஆச்சிரமத்தில் நேற்று வாராந்த அருளுரை!

*வடமராட்சி, மார்ச் 07*

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை பண்பாட்டு பேரவையின் ஏற்பாட்டில் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகன தாஸ் சுவாமிகள் தலைமையில், ஆச்சிரமத்தின் வாராந்த ஆன்மீக அருளுரை நேற்று நடைபெற்றது.

"தீக்கூர்ந்த திருமேனியான்" என்ற தொடர் சொற்பொழிவை துன்னாலை தெற்கு அ.த.க. பாடசாலை அதிபர் விஜயகுமார் ஆற்றினார். இந்த நிகழ்வில் புத்தளம் மாவட்டம் மணல் குன்று பிரதேச கருமாரி அம்மன் ஆலய ஸ்தாபகரும், சமூகசேவையாளருமான சு. மகேந்திரன், ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகளின் சேவையை பாராட்டி வாழ்த்து மடல் வழங்கிக் கௌரவித்தார். (ஐ-02)



## காலிறுதிப் போட்டிகள்

*யாழ்ப்பாணம், மார்ச் 08*

யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கம் நடத்தும் கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் நாளை "ஏ" பிரிவுக்கான காலிறுதி போட்டிகள் நடைபெறவுள்ளன.

நாளை சனிக்கிழமை அச்சுவேலி விக்னேஸ்வர விளையாட்டுக் கழக மைதானத்தில் இரவு 7 மணிக்கு நடைபெறும் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் எதிர் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

இரவு 8 மணிக்கு நடைபெறும் போட்டியில் அச்சுவேலி விக்னேஸ்வர விளையாட்டு கழகத்தை எதிர்த்து புத்தூர் சென்றல் ஸ்ரார் விளையாட்டு கழகம் விளையாடவுள்ளது. (ஐ)

## நூல் அறிமுக விழா

*யாழ்ப்பாணம், மார்ச் 08*

இணுவிலான் சிகாகோ பாஸ்கரின் வீரம் விளைந்த மண் (இலங்கை, இந்திய சுதந்திர போராட்டத்தை தழுவிய நாவல்) அறிமுக நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இணுவில் அறிவாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஐ)

## மகளிர் தின நிகழ்வுகள்

*கிளிநொச்சி, மார்ச் 08*

சுதந்திரப் பறவைகள் மகளிர் பேரவை நடத்தும் சர்வதேச மகளிர் நாள் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சுதந்திரப் பறவைகள் மகளிர் பேரவையின் தலைவி திருமதி முராளினி தினேஸ் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம், கிளிநொச்சி மாவட்ட மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி உதயனி நவரட்ணம், பருத்தித்துறை நகர சபை முன்னாள் உபதவிசாளர் திருமதி மதினி நெல்சன் ஆகியோர் பங்கேற்பர். (ஐ)

• • •


*கொழும்பு, மார்ச் 08*

கொழும்பு தமிழ்ச் சங்கம் நடத்தும் மகளிர் தின நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது.


கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் அந்த சங்கத்தின் தலைவர் சட்டத்தரணி சுகந்தி இராஜகுலேந்திரா தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கலா அமிர்தலிங்கம் சிறப்புரை ஆற்றுவார். புயலான பூவை நாடக ஆற்றுகையும் நடைபெறும். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். அழகும் இளமையும் கூடும். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் வேலையாட்களின் ஆதரவு கிட்டும். முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நாளில் முக்கியமான நான்கைந்து வேலைகளை பார்க்க வேண்டி வரும். வீண் அலைச்சலும் டென்ஷனும் அதிகரிக்கும். அதிருப்தி உண்டாகும்.

**மிதுனம்**
கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. திடீர் பயணங்கள் மற்றும் செலவுகளால் திணறுவீர்கள். உறவினர்களால் மனஸ்தாபங்கள் வந்து நீங்கும். வாகனத்தில் கவனம் தேவை.

**கடகம்**
ஆன்மிகப் பெரியோரின் ஆசிகிட்டும். பெற்றோரின் ஆதரவு பெருகும். மற்றவர்களுக்காக சில செலவுகளை செய்து பெருமைப்படுவீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் உதவுவார்கள்.

**சிம்மம்**
சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயல்படுவீர்கள். நீங்கள் பார்க்க நினைத்த ஒருவர் உங்களை தேடி வருவார். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள்.

**கன்னி**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். புண்ணியஸ்தலம் சென்று வருவீர்கள். நெளிவு சுளிவுகளை கற்றுக்கொள்வீர்கள்.

**துலாம்**
சந்திராஷ்டமம் நீடிப்பதால் சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் அத்தியாவசிய செலவுகள் அதிகமாகும். வியாபாரத்தில் போட்டிகள் அதிகரிக்கும். விமர்சனங்கள் உண்டு.

**விருட்சிகம்**
தன் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். மனைவி வழியில் ஒத்துழைப்பு அதிகரிக்கும். விலை உயர்ந்த ஆபரணங்களை வாங்குவீர்கள்.

**தனுசு**
கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். பணப் புழக்கம் அதிகரிக்கும். உறவினர் நண்பர்களின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி தங்கும். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களை தீட்டுவீர்கள்.

**மகரம்**
புதிய திட்டங்கள் நிறைவேறும். பிள்ளைகளின் வருங்காலத்திட்டத்தில் ஒன்று நிறைவேறும். ஆடம்பர செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் நல்ல செய்தி கேட்பீர்கள்.

**கும்பம்**
எதிர்ப்புகள் அடங்கும். தாய்வழி உறவினர்களிடையே கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். பழைய கடனைப் பற்றி அவ்வப்போது யோசிப்பீர்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**மீனம்**
பூர்வீக சொத்து பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். உறவினர்கள் பாராட்டும்படி நடந்துகொள்வீர்கள். சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள்.

# யாழ். போதனா மருத்துவமனையில் தாய்மார் தரையில் உறங்கும் நிலை!

## கஜேந்திரகுமார் எம். பி. கவலையுடன் சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச்.08

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் தாய்மார்கள் தரையில் உறங்கும் ஒரு சூழ் நிலை உருவாகியுள்ளது என்று பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற வரவு - செலவுத் திட்ட விவாதத்தில் சுகாதார அமைச்சு மற்றும் ஊடகங்கள் தொடர்பான விடயதானத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

"யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளரால் கடிதம் ஒன்று எனக்கு வழங்கப்பட்டது. அந்தக் கடிதத்தை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவிடமும் அவர் சமர்ப்பித்திருந்தார். அந்தக் கடிதம் மிகவும் விரிவான கடிதமாகும். அதில் ஆளணி மதிப்பாய்வு மற்றும் பல்வேறு தரவுகள் உள்ளன.

இந்தக் கடிதத்தின் மூலம் பணிப்பாளர் உட்கட்டமைப்பு மேம்பாட்டைக் கேட்கிறார். குறிப்பாக அவர் ஒரு புதிய மகப்பேறு பிரிவு, இருதயவியல், இருதய மார்பு பிரிவு உள்ளிட்ட மேம்பட்ட சிகிச்சைகளுக்கான சிறப்புப் பிரிவு மற்றும் 30இற்கும் மேற்பட்ட சிகிச்சை உட்கட்டமைப்பு வசதிகள் தேவை என்று தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் உள்ள மகப்பேறு விடுதி 2012 இல் பாழடைந்தமையால் அழிக்கப்பட்டது. அதன் பின்னர் நான்கு விடுதிகளுக்குரிய இடத்தில் 16 விடுதிகள் இப்போது செயல்பட்டு வருகின்றன. நீங்கள் அந்த அலகுக்குச் சென்றால், தாய்மார்கள் தரையில் தூங்கும் ஒரு பயங்கரமான சூழ்நிலையை அவதானிக்கலாம். முற்றிலும் ஏற்றுக் கொள்ள முடியாத இடத்தில் தற்போதைய விடுதி உள்ளது. பெரிய அறுவை சிகிச்சைகளுக்குப் பின்னர் ஐ. சி.யுவில் பராமரிக்கப்படும் தங்கள் குழந்தைகளுக்கு பாலூட்டுவதற்கு தாய்மார்கள் கிட்டத்தட்ட 20 நிமிடங்கள் நடந்து செல்லவேண்டும். இது முற்றிலும் ஏற்றுக் கொள்ள முடியாததாகும்.

இந்த விடயத்துக்கு நீங்கள் முன்னுரிமையளிக்க வேண்டும். இந்த விடயங்களை அவதானித்து மகப்பேற்று விடுதி தொடர்பில் உடனடியாக செயல்படுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

யாழ். போதனா மருத்துவமனை நாட்டின் நான்காவது தேசிய மருத்துவமனையாக உள்ள நிலையில், அதனை விரிவாக்குவதற்கு பணிப்பாளரால் நிலவசதி கேட்கப்பட்டுள்ளது. மீனாட்சி அம்மன் வீதியில் உள்ள யாழ். போதனா மருத்துவமனைக்கு சொந்தமான நிலம் தற்போது பாதுகாப்புப் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. எனவே, அவர் அந்த நிலத்தை மருத்துவமனைக்குத் திருப்பித் தருமாறு கேட்கிறார். மணிக்கூண்டுக் கோபுர வீதியில் அமைந்துள்ள கட்டடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான நிலத்தையும் அவர் கேட்டுள்ளார். எனவே, இவை தொடர்பில் சுகாதார அமைச்சர் கவனம் செலுத்த வேண்டும்"- என்றார். (எ)

# வழமையான சேவைக்கு திரும்பிய சிவகங்கை

யாழ்ப்பாணம், மார்ச்.08

காங்கேசன்துறை - நாகப்பட்டினம் இடையிலான பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் சிவகங்கை கப்பல் சேவையானது வழமைக்குத் திரும்பியுள்ளதாக அந்த நிறுவனத்தின் பணிப்பாளர் எஸ். சத்தியசீலன் தெரிவித்தார்.

வாரத்தில் செவ்வாய்க்கிழமை தவிர்ந்த மற்றைய நாட்களில் இந்தக் கப்பல் சேவை இடம்பெற்று வருகின்றது என்று அவர் மேலும் கூறினார். (எ-05)

# வவுனியா இரட்டை கொலை சந்தேக நபர்களுக்கு பிணை

வவுனியா, மார்ச்.08

வவுனியா, தோணிக்கல் பகுதியில் இடம்பெற்ற இரட்டைக் கொலைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டவர்களுக்கான விளக்கமறியலை நீடிக்க காரணம் போதாமையால் பிணை வழங்கலாம் என வவுனியா மேல் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

வவுனியா, தோணிக்கல் பகுதியில் கடந்த வருடம் யூலை மாதம் 23 ஆம் திகதி அதிகாலை வீடு புகுந்து தாக்குதல் நடத்தி பெற்றோல் ஊற்றி எரியூட்டப்பட்ட சம்பவத்தில் கணவன் மற்றும் மனைவி ஆகிய இருவர் உயிரிழந்தனர்.

இந்த இரட்டை கொலை சம்பவம் குறித்து சந்தேகத்தில் ஏழு பேர் கைது செய்யப்பட்டிருந்ததுடன், அவர்களிடம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கொலை விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்திருந்ததுடன், அவர்கள் நீதிமன்ற உத்தரவுக்கமைய தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

குறித்த வழக்கு விசாரணை வவுனியா மேல் நீதிமன்றில் கடந்த 5 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள பிரதான சந்தேக நபரின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி ஆர். டி. சில்வா ஆஜராகி சந்தேக நபர்கள் சார்பில் மேல் நீதிமன்றில் பிணை கோரி மனு சமர்ப்பித்தார்.

அதனை மறுத்து சட்டமா அதிபர் திணைக்களத்தின் சட்டவாதிகளால் பிணை வழங்குவதற்கு மறுப்புத் தெரிவித்து விளக்கமறியலை நீடிக்குமாறு வாதங்கள் முன்வைக்கப்பட்டன.


இந்த நிலையில், நீதிபதி எம். எம். எம். மிஹால் சட்டமா அதிபர் திணைக்களத்தால் பிணை மறுப்புக்கு விசேட காரணங்கள் முன்வைக்கப்படாமையால் கைது செய்யப்பட்டவர்களுக்கான விளக்கமறியலை நீடிக்கக் காரணம் போதாமையால் குறித்த சந்தேக நபர்களுக்குப் பிணை வழங்கி உத்தரவிட்டார். (எ-10)

# 1000 போதை மாத்திரைகளுடன் வவுனியாவில் இளைஞன் கைது

வவுனியா, மார்ச்.08

வவுனியாவில் 1000 போதை மாத்திரைகளுடன் 27 வயது இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் திடீர் சுற்றிவளைப்பை மேற்கொண்ட பொலிஸார், வியாபார நோக்கில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 1000 போதை மாத்திரைகள் மற்றும் 2200 மில்லி கிராம் ஹெரோயினுடன் தேக்கந்தோட்டம் பகுதியை குறித்த இளைஞனை நேற்றுக்காலை கைது செய்தனர்.



இவ்வாறு கைது செய்யப்பட்ட நபரை மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தவுள்ளதாக பொலிஸார் கூறினர். (எ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னிடம் கேள்வி கேட்டவர்களில் இருவர் புலிகளின் ஆதரவாளர்கள்

## அல்ஜசீரா பேட்டி குறித்து ரணில்



கொழும்பு, மார்ச் 08

**அல்ஜசீராவின் பேட்டி குறித்து அதிருப்தி வெளியிட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தன்னிடம் கேள்வி எழுப்பிய நிபுணர்கள் குழுவின் நேர்மை குறித்து கேள்வி எழுப்பியுள்ளார்.**

நிகழ்ச்சி தொகுப்பாளர் மெஹ்டி ஹசனுடன் இணைந்து தன்னிடம் கேள்வி கேட்டவர்களில் இருவர் விடுதலைப்புலிகள் ஆதரவாளர்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் இந்த கலந்துரையாடலில் கலந்து கொள்வார் என எனக்கு தெரிவிக்கப்பட்டது என குறிப்பிட்டுள்ள ரணில் விக்கிரமசிங்க, அவருடன் கொள்கை ரீதியில் முரண்பாடுள்ள போதிலும் அவரை எனக்கு தெரியும் என்பதால் நான் சற்று ஆறுதலாக உணர்ந்தேன் என குறிப்பிட்டுள்ளார்.

எனினும் அவரை நீக்கி விட்டு வேறு இருவரை சேர்த்துள்ளனர்.

அவர்கள் விடுதலைப்புலிகள் ஆதரவாளர்கள் என எனக்கு பின்னர் தெரிவிக்கப்பட்டது என முன்னாள் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

நான் வழங்கிய பதில்களின் முக்கிய விபரங்களை அவர்கள் ஒளிபரப்பவில்லை என தெரிவித்துள்ள ரணில் விக்கிரமசிங்க, நான் உள்ளூர் ஊடகங்களுடன் பேசும்போது அது நேரடியாக ஒளிபரப்பு செய்யப்படும்,நல்லது மோசமானது அனைத்தும் ஒலிபரப்பாகும் என தெரிவித்துள்ளார்.

ஆனால் அல்ஜசீரா எனது இரண்டு மணி நேர பேட்டியில் ஒரு மணிநேரத்தை மாத்திரம் வெளியிட்டுள்ளது என அவர் கூறினார். (அ)

# மேலதிக வகுப்புகளுக்கு தடை!

கொழும்பு, மார்ச் 08

2024 கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சையை இலக்காக கொண்ட அனைத்து கற்றல் செயற்பாடுகளும் எதிர்வரும் 11 ஆம் திகதி நள்ளிரவு முதல் தடை விதிக்கப்படவுள்ளன.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் இதனைத் தெரிவித்துள்ளார். இதற்கமைய, 2024 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான பிரத்தியேக வகுப்புகள், கருத்தரங்குகள், செயலமர்வுகள் மற்றும் பயிற்சி பட்டறை என்பவற்றுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. கல்விப் பொதுத் தராதர சாதாரணத் தரப்பரீட்சை எதிர்வரும்17 ஆரம்பமாகவுள்ளது.

# இவ்வருடம் 36,000 ஏக்கரில் தென்னை உற்பத்தி

கொழும்பு, மார்ச் 08

இந்த வருடத்தில் 36,000 ஏக்கரில் புதிதாக தென்னை பயிரிடத் திட்டமிட்டுள்ளதாகவும் அவற்றில் 16,000 ஏக்கர் வடக்கு தென்னை முக்கோண வலயத்திலும் எஞ்சிய 20,000 ஏக்கர் ஏனைய பகுதிகளிலும் இடம்பெறும் என பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்தார்.

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு அமைச்சரின் தலைமையில் பாராளுமன்றத்தில் கூடிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தென்னை பயிரிச்செய்கையை மேம்படுத்தும் நோக்கில் இவ்வாண்டில் 2.5 மில்லியன் தேங்காய் விதைகள் உற்பத்தி செய்யப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (அ)

# இலங்கை மின்சார சபையின் இலாபம் 99 வீதத்தால் வீழ்ச்சி

கொழும்பு, மார்ச் 08

கடந்த 2024 டிசெம்பர் 31 உடன் நிறைவடைந்த காலாண்டில் இலங்கை மின்சார சபையின் நிகர இலாபம் 99 வீதத்தால் குறைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மின்சார சபையின் வருமானம் குறைதல் மற்றும் விற்பனைச் செலவு உயர்வே இந்த நிலைமைக்கு காரணம் என தெரிவிக்கப்படுகிறது.

2024 டிசெம்பர் 31 உடன் முடிவடைந்த காலாண்டில் மின்சார சபையின் வருமானம் 111.80 பில்லியன் ரூபாவாக பதிவாகியுள்ளதோடு, 2023 ஆம் ஆண்டின் ஒப்பிடுகையில் இது 156.25 பில்லியனில் இருந்து 28 வீதம் குறைவாகும். இதற்கிடையில், மின்சார சபையின் விற்பனை செலவுகள் 78.03 பில்லியனாக இருந்து, இந்த காலாண்டில் இது 49 வீத அதிகரிப்புடன் 116.29 பில்லியனாக அதிகரித்துள்ளது.

இதன் பின்னணியில் கடந்த 2023 டிசெம்பர் காலாண்டில் 78.22 பில்லியன் ரூபாவாக பதிவான மின்சார சபையின் மொத்த இலாபம், கடந்த காலாண்டில் 4.49 பில்லியன் வரையில் 106 வீதத்தால் குறைவடைந்துள்ளது.

மின்சார சபையானது 2024 ஆம் ஆண்டின் கடைசி காலாண்டில் 3.04 பில்லியன் இயக்க இழப்பைச் சந்திக்க வேண்டியிருந்தது. 2023 டிசெம்பர் காலாண்டில், 91.97 பில்லியன் செயல்பாட்டு இலாபத்தை பதிவு செய்ய முடிந்துள்ளமை விசேட அம்சமாகும்.

இருப்பினும், 2024 டிசெம்பர் காலாண்டின் நிதி வருமானம் மற்றும் செலவுகளை சரி செய்த பிறகு, மின்சார சபையின் நிகர இலாபம் 603 மில்லியனாக ரூபாவாக பதிவாகியுள்ளது. இது 2023 ஆம் ஆண்டின் கடைசி காலாண்டின் நிகர இலாபத்துடன் ஒப்பிடும் போது, 99 வீதம் குறைவு எனவும் தெரியவந்துள்ளது. (அ)

# கொழும்பு றோயல் மாணவர்கள் சிலரின் செயல்பாடு கிறிஸ்தவ மக்களின் மனங்களை நோகடிக்கும் செயல்!

## தேசிய கத்தோலிக்க கல்விப் பணிப்பாளர் றோயல் அதிபருக்கு கடிதம்

கொழும்பு, மார்ச் 08

கொழும்பு றோயல் கல்லூரியின் மாணவர்களில் சிலர் கிறிஸ்தவ மதத்தின் புனித சின்னமான சிலுவையை அகௌரவப்படுத்தும் விதத்தில் நடந்து கொண்டுள்ள சம்பவம் உலகெங்கும் வாழும் கிறிஸ்தவ மக்களை மனங்களை நோகடிக்கச் செய்துள்ளதாக தேசிய மற்றும் கத்தோலிக்க கல்விப் பணிப்பாளரும் கத்தோலிக்க தனியார் பாடசாலைகளின் பொது முகாமையாளருமான அருட்தந்தை கெமுனு டயஸ் அடிகளார் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து அவர் றோயல் கல்லூரி அதிபருக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

ஏனைய மதங்களையும், அவர்களின் புனித சின்னங்களை அகௌரவப்படுத்தல் மற்றும் அசௌகரியங்கள் ஏற்படுத்துகின்ற செயல்களில் ஈடுபடுவதை தவிர்க்கும் விதத்தில் வாழ்வது எப்படி என்பதை உங்கள் பாடசாலை மாணவர்களுக்கு தெளிவுப்படுத்தும்படி அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது-உலகெங்கும் வாழும் கத்தோலிக்கர்கள் தவக்காலத்தின் ஆரம்ப தினமான விபூதிப் புதன்தினத்தை அனுஷ்டித்திருந்தனர்.

இதுபோன்றதொரு புனிதமான நாளில் கிறிஸ்தவர்களின் மனம் நோகும்படியாக கொழும்பு றோயல் கல்லூரி மாணவர்கள் சிலரின் செயற்பாடு அமைந்திருந்தமை வருத்தமளிக்கிறது.

கொழும்பு றோயல் கல்லூரியின் மாணவர்களில் சிலர் கிறிஸ்தவ மதத்தின் புனித சின்னமான சிலுவையை அகௌரவப்படுத்தும் விதத்திலான காணொளிப் பதிவொன்று சமூக வலைத்தளத்தில் வெளியாகிியிருந்தமை கிறிஸ்தவ மக்களின் மனங்களை வேதனைக்கு உட்படுத்தியுள்ளது.

மேற்படி சம்பவத்தால் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை மற்றும் இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவை உள்ளிட்ட குருக்கள் மற்றும் கத்தோலிக்க மக்கள் அனைவரையும் மனதளவில் பெரும் காயத்தை உண்டு பண்ணியுள்ளது.

நாம் எந்தவொரு மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் ஏனைய மதங்களின் புனித சின்னங்களை அகௌரவப்படுத்தல் மற்றும் அசௌகரியங்கள் ஏற்படுத்துகின்ற செயல்களில் ஈடுபடுவதை தவிர்க்கும் விதமாக வாழவேண்டும் என்பதை உங்கள் பாடசாலை மாணவர்களுக்கு தெளிவுப்படுத்துமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்-என குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# இறக்குமதி செய்ய அனுமதித்த வாகனங்கள் 90 நாட்களுக்குள் பதிவு செய்யப்படவேண்டும்

## நிதி அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 08

இலங்கைக்கு இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்ட வாகனங்கள் 90 நாட்களுக்குள் பதிவு செய்யப்பட வேண்டும் என நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிககப்படுகிறது.

இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களில் 25 வீதமானவை ஆறு மாதங்களுக்குள் பதிவு செய்யப்படாவிட்டால் இறக்குமதிக்கான அனுமதி இரத்துச் செய்யப்படும் எனவும் அரசாங்க நிதி பற்றிய குழுவுக்கு அதிகாரிகள் அறிவிப்பு விடுத்துள்ளனர்.

அதன்படி வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு வழங்கப்பட்டுள்ள அனுமதியானது குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு அமைய வழங்கப்பட்டிருப்பதாக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

பொருளாதார செயற்பாடுகள் மீண்டும் வளமைக்குத் திரும்பச் செய்யும் நோக்கிலும், நாட்டின் பொருளாதார நிலைப்புத் தன்மையைப் பாதுகாத்து மேம்படுத்துதல்,

அந்நியச் செலாவணி இருப்பைப் பாதுகாக்கும் அதேநேரம், தேவையற்ற வாகன இருப்புக்கள் பேணப்படுதல், அதிகப்படியான வாகனங்கள் இறக்குமதி செய்யப்படுவதை அதைரியப்படுத்தும் நோக்கி லேயே இந்த நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருப்பதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

இதற்கு அமைய, இலங்கைக்கு இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்ட வாகனங்கள் 90 நாட்களுக்குள் பதிவு செய்யப்பட வேண்டும். மேலும், யாராவது ஒரு இறக்கு மதியாளரினால் இறக்குமதி செய்யப்பட்ட மொத்த வாக னங்களில் 25 வீதமானவை ஆறு மாதங்களுக் குள் பதிவுசெய் யப்படா விட்டால் குறித்த இறக்குமதி யாளருக்கு வழங் கப்பட்ட அனுமதி இரத் துச் செய் யப்படும் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர். (அ)

# நுவரெலியாவில் தொலைபேசியில் கொழும்பில் ஏணியில் போட்டி!

## தமிழ் முற்போக்கு கூட்டணி தீர்மானம்

கொழும்பு, மார்ச் 08

உள்ளூராட்சிச்சபைத் தேர்தலில் நுவரெலியா, பதுளை, கொழும்பு, கண்டி உட்பட பல மாவட்டங்களில் போட்டியிடுவதற்கு தமிழ் முற்போக்கு கூட்டணி தீர்மானித்துள்ளது.

தொழிலாளர் தேசிய முன்னணி, ஜனநாயக மக்கள் முன்னணி, மலையக மக்கள் முன்னணி என்பன அங்கம் வகிக்கும் தமிழ் முற்போக்கு கூட்டணி நுவரெலியா, கண்டி, பதுளை, மாத்தளை, கம்பஹா, குருநாகல், இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை, மாத்தறை மற்றும் கொழும்பு ஆகிய மாவட்டங்களில் போட்டியிடுவதற்கு தீர்மானித்துள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் கூட்டணியின் கீழ் தொலைபேசிச் சின்னத்தில் களமிறங்கவுள்ளது.

கொழும்பு, கேகாலை ஆகிய மாவட்டங்களில் தமிழ் முற்போக்கு கூட்டணி போட்டியிடும் சபைகளுக்கு ஏணிச் சின்னத்தில் வேட்பாளர்கள் களமிறக்கப்படவுள்ளனர்.

ஏனைய மாவட்டங் களில் போட்டியிடும் சின்னம் பற்றி இன்னும் முடிவெடுக்கப் படவில்லை. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படை குறைப்பை செய்யும் தீர்மானம் படுபயங்கரம்!

## ராவண பலய அமைப்பு எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 08

**"நாட்டில் எதிர்காலத்தில் போர் ஏற்படுமா, இல்லையா என்பதை தற்போதே கணிக்க முடியாது. எனவே, படை குறைப்பு செய்யும் தீர்மானம் படு பயங்கரமாகும்." என்று ராவணா பலய அமைப்பின் தலைவர் இத்தேகந்தே சத்தாதிஸ்ஸ தேரர் தெரிவித்தார்.**

பொதுஜன பெரமுன கட்சி தலைமையகத்தில், பொதுஜன மகளிர் முன்னணியின் அலுவலகம் நேற்று முன் தினம் திறக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே தேரர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு-தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வருவதற்கு பெண்களே பெரும் பங்களிப்பு வழங்கினர். வீடு வீடாக சென்று அக்கட்சியின் பெண்கள் பொய்யுரைத்தனர். எனவே, அதனை சரிசெய்ய வேண்டிய பொறுப்பு



எமது அணியிலுள்ள பெண்களுக்கு உள்ளது. மக்கள் மனம் அறிந்து சேவையாற்றுவதே சிறந்தது.


நுகேகொடையில் இருந்து கொழும்புவரை நபரொருவர் மோட்டார் சைக்கிளில் நிர்வாணமாக பயணித்துள்ளார். மூன்று இடங்களில் எரிபொருளும் நிரப்பியுள்ளார். கடுகண்ணாவை பகுதியில் வைத்தே கைது செய்யப்பட்டுள்ளார். நாட்டில் பாதுகாப்பு நிலைவரம் இவ்வாறுதான் உள்ளது.

தேசிய பாதுகாப்பு தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். இராணுவத்தின் எண்ணிக்கையை குறைக்க முற்படுவது பாரதூரமான விடயமாகும்.

எதிர்காலத்தில் என்றாவது ஒரு நாள் போர் ஏற்படுமா, இல்லையா என்பதை தற்போது தீர்மானிக்க முடியாது. கிழக்கில் அடிப்படைவாத குழுவொன்று இருப்பதாக புலனாய்வு பிரிவு கூறியுள்ளது. எனவே, எந்த நேரத்தில் தாக்குதல் நடக்கும் எனக் கூறமுடியாது.

எனவே, இராணு வத்தின் எண்ணிக்கையை ஒரு லட்சம் வரை குறைப்பதன்மூலம் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாது-என்றார். (அ)

# பண்டாரவளையில் மயிரிழையில் உயிர் தப்பினர் பஸ் பயணிகள்!



கொழும்பு, மார்ச் 08

பண்டாரவளை பகுதியில் இ.போ.ச பஸ்ஸொன்று பயணித் துக்கொண்டிருக்கையில் சில்லு திடீரென கழன்றுள்ளது.

எனினும், தெய்வாதீனமாக பாதிப்பு எதுவும் இன்றி பயணிகள் தப்பியுள்ளனர்.

நேற்று காலை 7.30 மணியளவிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பண்டாரவளை டிப்போவுக்குரிய குறித்த பஸ், நேற்று காலை நெலுவ கீழ் பிரிவில் பயணித்துக்கொண்டிருக்கையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நெருக்கமான வளைவுகளையும், பாரிய பள்ளத்தாக்கையும் உடைய குறித்த பகுதியூடாக பஸ் பயணிக்கையில், திடீரென சில் முறிந்தமை பய ணிகளை அச்சத்தில் ஆழ்த்தி யது.

பஸ்ஸில் பாடசாலை மாணவர்கள், வேலைக்கு செல்லும் உத்தியோகத்தர்கள் என பலரும் பயணித்துள்ளனர்.

குறித்த வீதி ஆபத்தானது என்பதால், பயணிகள் மயிரிழையிலேயே உயிர்தப்பியுள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

எனவே, பஸ் தனது பயணத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் அது பயணத்துக்கு ஏற்றவகையில் உள்ளதா என்பதை சாரதிகள், நடத்துநர்கள் மற்றும் டிப்போ அதிகாரிகள் பரிசோதிக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ)

# தமிழ் மாணவர்களைப் பலவந்தமாக இறக்கிவிட்ட இ.போ.ச பஸ் நடத்துநர்!


கொழும்பு, மார்ச் 08

நாவலப்பிட்டியில் இருந்து கினிகத்தேனை ஊடாக ஹற்றனுக்கு பயணிகளை ஏற்றிச்செல்லும் ஹற்றன் டிப்போவுக்குச் சொந்தமான அரச பஸ் ஒன்றின் நடத்துநர் தமிழ் பாடசாலை மாணவர்களை பலவந்தமாக பஸ்ஸில் இருந்து வெளியேறுமாறு பணித்த சம்பவம் ஒன்று நேற்று முன் தினம் காலை இடம் பெற்றுள்ளது.

ஹற்றன் கல்வி வலையத்திற்குட்பட்ட கினிகத்தனை கடவளை விக்னேஸ்வரா கல்லூரியில் கல்வி பயிலும் மாணவர்களான இவர்களைப் பஸ் நடத்துநர் பஸ்ஸில் இருந்து வெளியேறுமாறு கூறியுள்ளார்.

பாடசாலை மாணவர்களுக்கு என்று இலங்கை போக்குவரத்துச் சபையின் ஊடாக வழங்கப்படும் பருவ காலச் சீட்டை, பஸ் நடத்துநரிடம் காண்பித்தபோதும், பருவகாலச் சீட்டை வைத்திருக்கும் மாணவர்களைப் பஸ்ஸிலிருந்து வெளியேறுமாறு நடத்துநர் தொடர்ந்து வலியுறுத்தியதாக மாணவர்கள் தெரிவித்தனர்.

நாவலபிட்டியிலிருந்து கினிகத்தனை ஊடாக ஹற்றன் வரை செல்லும் அரச பஸ்ஸில், அதிகமாக தமிழ் மாணவர்களே இவ்வாறு புறக்கணிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.




"இது அரச பஸ் நடத்துநரின் சொந்த பஸ் அல்ல. பாடசாலை மாணவர்களாகிய நாங்கள் பணம் செலுத்தி பருவகாலச் சீட்டைப் பெற்றுள்ளோம். எங்களால் பஸ்ஸை விட்டு வெளியேற முடியாது" என்று மாணவர்கள் கூறியுள்ளனர்.

அதற்குப் பதிலளித்த பஸ் நடத்துநர், "ஆம், இது என்னுடைய பஸ்.

நீங்கள் அனை வரும் பஸ்ஸை விட்டு இறங் குங்கள்" எனக் கூறும் காணொளி ஒன்று வெளியாகியுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக, அந்தக் காணொளியை மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சோ. ஸ்ரீதரன் சமூக வலைத்தளங்களில் பதிவிட்டதோடு, தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரத்தின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளார்.

தமிழ் பாடசாலை மாணவர்களுக்கு இதுபோன்ற அநீதிகள் தொடர்ந்து இடம்பெற்று வருவது தொடர்பாக, ஹற்றன் டிப்போவின் முகாமையாளர் தொடர்புகொண்டு, இது தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுக்குமாறு பழனி திகாம்பரம் பணிப்புரை விடுத்துள்ளார்.

மேலும், இந்தச் சம்பவம் தொடர்பாக உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று ஹற்றன் டிப்போவின் முகாமையாளர் தெரிவித்ததாக பாராளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம் குறிப்பிட்டார். (அ)

# முக்கிய அஞ்சல் நிலையங்களை சுற்றுலாத் தலங்களாக்க திட்டம்!

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

கொழும்பு, மார்ச் 08

இலங்கையின் முக்கிய நகரங்களிலுள்ள அஞ்சல் நிலையங்களைச் சுற்றுலாத் தலங்களாக மாற்றுவதற்காக அஞ்சல் துறையின் கீழ் ஒரு புதிய திட்டமொன்று ஆரம்பிக்கப்படுமென சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அத்துடன் நுவரெலியா, கண்டி, கொழும்பு மற்றும் காலி ஆகிய பகுதிகளிலுள்ள



அஞ்சல் நிலையங்கள் இதற்காக அடையாளம் காணப்பட்டுள்ளதாகக் அவர் குறிப்பிட்டார்.

அஞ்சல் துறையை இலாபம் ஈட்டும் நிறுவனமாக மாற்ற இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார். (அ)

# பாரவூர்த்திமீது மோதிய யானை!

கொழும்பு, மார்ச் 08

பலுகஸ்வெவ பகுதியில் நேற்று அதிகாலை நெடுஞ்சாலையில் பயணித்த யானை ஒன்று பாரவூர்த்தியுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்துக்குள்ளான யானையின் தந்தங்கள் உடைந்து விழுந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்த யானை காட்டுப்பகுதிக்கு தப்பிச் சென்ற நிலையில், கணேவல்பொல வனவிலங்கு அதிகாரிகள் உடனடியாக கால்நடை திணைக்களத்துக்கு அறிவித்து பாரவூர்த்தியை வனவிலங்கு திணைக்களத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

சுமேதா என்ற யானையே காயமடைந்துள்ளதாக ஊகிக்கப்படுகின்றது.

வனவிலங்கு அதிகாரிகள் யானையை தேடும் பணியை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# உயிர் மருத்துவ பொறியியல் சேவையின் மேம்பாட்டுக்காக தென்கொரியா உதவி!

கொழும்பு, மார்ச் 08

சுகாதார அமைச்சின் உயிர் மருத்துவ பொறியியல் சேவையின் மேம்பாட்டுக்காக தென்கொரிய சர்வதேச சுகாதார அறக்கட்டளை நிறுவனத்திடமிருந்து சுமார் 7.2 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நன்கொடையாக வழங்கி வைக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்தோடு, 360 மில்லியன் ரூபா மதிப்புள்ள நவீன தொழில்நுட்ப வசதிகள் கூடிய 8 வாகனங்கள் மற்றும் உபகரணங்களும் சுகாதார அமைச்சிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டன.

நாட்டின் உயிர் மருத்துவ பொறியியல் சேவையில் திறன் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ், சுகாதார துறைக்காக கொரியா சர்வதேச சுகாதார அறக்கட்டளை நிறுவனம் 7.2 மில்லியன் அமெ ரிக்க டொலர்களை நன்கொடையாக வழங்கியுள்ளது.

மேலும் உயிர் மருத்துவ பொறியியல் பிரிவிக்காக 160 மில்லியன் ரூபா பெறுமதியான நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய 8 வாகனங்களும், 200 மில்லியன் ரூபா பெறுமதி யான உபகரணங்கள் மற்றும் மருத்துவ கருவிகள் என்பன இலங்கைக்கான தென்கொரிய தூதர் மியோன் லீ மற்றும் கொரியா அறக்கட்டளையின் சர்வதேச சுகாதாரத்தின் தலை வர் வைத்தியர் இல்-சூ ஹா ஆகி யோரால் சுகாதார அமைச் சின் வளாகத்தில் வைத்து சுகா தார மற்றும் வெகுசன ஊடக துறை அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ விடம் உத்தியோக பூர்வமாக கையளிக்கப் பட் டது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் சூத்திரதாரியைத் தெரியும்!

## ஞானசார தேரர் பரபரப்பு தகவல்

கொழும்பு, மார்ச் 08

**உயிர்த்த ஞாயிறு தற்கொலை தாக்குதலுடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரி யார் என்பது தமக்கு நன்கு தெரியும் என பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.**



இந்த பிரதான சூத்திரதாரி யார் என்பது தெரியும் என்பதனை மிகவும் பொறுப்புடன் கூறுவதாகவும் அதனை ஊடகங்களிடம் பகிர்ந்து கொள்ளத் தயாரில்லை எனவும் அவர் கூறினார்.

இந்த தற்கொலைத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரி குறித்து ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் பாதுகாப்பு பிரதானிகளிடம் வெளிப்படுத்த உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அதன் பின்னர் ஊடகங்களிடம் விவரங்களை வெளியிட உள்ளதாகவும் அவர் கூறினார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் பற்றிய சகல விடயங்களையும் அம்பலப்படுத்துவதற்கு தயார் எனவும்,

தாக்குதலின் பிரதான சூத்திரதாரி யார், அவர் யாருடன் தொடர்பு பேணினார், அவர் எங்கு தங்கியிருந்தார்,

அவர் சஹ்ரானை பயிற்றுவித்த விதம் உள்ளிட்ட அனைத்து விடயங்களும் தமக்கு தெரியும் எனவும் ஞானசார தேரர் தெரிவித்தார். (அ)

# சிறுபோகத்துக்கான உரத்தை தட்டுப்பாடின்றி வழங்குங்கள்!

## ஜனாதிபதி அநுரகுமார

கொழும்பு, மார்ச். 08

சிறுபோகத்தின்போது பயிர்ச் செய்கைகளை ஆரம்பிப்பதற்காக வயல்நிலங்களுக்கு தேவையான உரத்தை தட்டுப்பாடின்றி தொடர்ச்சியாக வழங்குவதன் அவசியத்தை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வலியுறுத்தினார்.



சிறு போகத்துக்கு அவசியமான உர விநியோகம் தொடர்பில் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடந்த கலந்துரையாடலிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சிறு போக நெற்பயிர்ச்செய்கை மற்றும் ஏனைய விவசாய நடவடிக்கைகளுக்கு தேவையான உரம் தொடர்பில் இங்கு முக்கியமாக ஆராயப்பட்டதோடு தடையின்றி விவசாயிகளுக்கு சிறு போக பயிர்ச்செய்கையை ஆரம்பிப்பதற்கு உகந்த சூழலை ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி மேலும் சுட்டிக் காட்டினார். (ஐ)

# சுற்றுலா பயணியிடம் இலஞ்சம் கோரிய 3 பொலிஸார் சிக்கினர்!

கொழும்பு, மார்ச் 08

ஆஸ்திரிய சுற்றுலாப் பெண் பயணி ஒருவரிடம் இலஞ்சம் கேட்ட குற்றச்சாட்டில் பொலிஸ் சார்ஜன்ட் மற்றும் இரண்டு கான்ஸ்டபிள்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுற்றுலாப் பயணி தன்னிடமிருந்த வெளிநாட்டு சிகரெட்டுகள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்காமல் இருக்க 50,000 ரூபா பணம் வழங்குமாறு சந்தேக நபர்கள் கோரியுள்ளதாக பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் சார்ஜன்ட் ஒருவரும் இரண்டு கான்ஸ்டபிள்களுமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பிலான மேலதிக விசாரணையை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# ஒரே பதிவிலக்கம் உடைய இரண்டு கார்கள் சிக்கின!

கொழும்பு, மார்ச் 08

ஒரே மாதிரியான பதிவு இலக்கங்களைக் கொண்ட இரண்டு கார்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

வென்னப்புவ பொலிஸ் பிரிவின் வயிக்கால பகுதியில் ஒருவருக்குச் சொந்தமான கார் ஒன்றின் பதிவுப் புத்தகம் மற்றும் வாகன மாற்று விண்ணப்பப் படிவம் திருடப்பட்டு, போலி பதிவுப் புத்தகம் மாற்றப்பட்டுள்ளதாக வெண்னப்புவ பொலிஸ் நிலையத்திற்கு கிடைத்த முறைப்பாட்டைத் தொடர்ந்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதன்படி, வென்னப்புவ பொலிஸ் பிரிவின் வய்க்கால பகுதியில் வென்னப்புவ பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழு மேற்கண்ட காரின் அதே நிறத்தில் அதே பதிவு இலக்கத்தைக் கொண்ட ஒரு காரை கண்டுபிடித்தனர். பின்னர் இரண்டு கார்களையும் பொலிஸார் பொறுப்பேற்றனர்.

மேலதிக விசாரணைக்காக இரண்டு வாகனங்கள் சிலாபம் பிரிவு விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (அ)

# பொலிஸாருக்கு இலஞ்சம் வழங்கிய இருவர் கைது!

கொழும்பு, மார்ச் 08

நிக்கவெரட்டிய பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வரும் சார்ஜன்ட் ஒருவருக்கு 20,000 ரூபாவை இலஞ்சமாக வழங்க முற்பட்டமை மற்றும் அதற்கு உதவிய குற்றச்சாட்டில் இரண்டு நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கால்நடை திருட்டுச் சம்பவம் தொடர்பாக நிக்கவெரட்டிய பொலிஸ் நிலையத்தின் குற்றப் புலனாய்வுப் பிரிவால் தேடப்படும் இரண்டு சந்தேக நபர்களின் பெயர்களை, குறித்த வழக்கின் சாட்சியாளர்களாக பெயர் மாற்றம் செய்வதற்காக இவ்வாறு இலஞ்சம் வழங்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

தம்பதெனிய மற்றும் அளவ்வ பகுதிகளைச் சேர்ந்த இரண்டு நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

குறித்த இருவரும் நேற்று முன் தினம் மாலை 4 மணியளவில் இலஞ்ச ஒழிப்பு ஆணைக் குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர். (அ)

# களுத்துறையில் விருப்புவாக்கு மீளவும் எண்ணப்படவேண்டும்!

## ராஜித சேனாரத்ன மனு தாக்கல்

கொழும்பு, மார்ச் 08

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் களுத்துறை மாவட்டத்தில் புதிய ஜனநாயக முன்னணி கட்சியின் வேட்பாளர்கள் பெற்ற விருப்பு வாக்குகளை மீண்டும் எண்ணவும், புதிய முடிவுகளை வெளியிடவும் உத்தரவிடக் கோரி முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனுவை எதிர்வரும் செப்ரெம்பர் 30ஆம் திகதி பரிசீலிப்பதற்கு உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனு நேற்று முன் தினம் மூவரடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு முன் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த மனுவில் பிரதிவாதிகளாக தேர்தல் ஆணைக்குழு மற்றும் அதன் தலைவர் உள்ளிட்ட அதிகாரிகள், களுத்துறை தெரிவத்தாட்சி அதிகாரி, களுத்துறை மாவட்டத்தில் புதிய ஜனநாயக முன்னணியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன, சட்டமா அதிபர் உள்ளிட்ட தரப்பினர் பெயரிடப்பட்டுள்ளனர்.

கடந்த பாராளுமன்றத் தேர்தலின் போது களுத்துறை மாவட்டத்தில் விருப்பு வாக்குகளை எண்ணுவதில் ஏற்பட்ட முறைகேடுகள் காரணமாக பாராளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட முடியாமல் போனதாக மனுதாரர் தெரிவித்தார்.

தனக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினருக்கும் இடையிலான விருப்பு வாக்குகளில் உள்ள வித்தியாசம் 119 வாக்குகள் மட்டுமே என்றும், வாக்கு எண்ணிக்கையில் ஏற்பட்ட முறைகேடுகள் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், தனது அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக தீர்ப்பளிக்குமாறும், கடந்த பாராளுமன்றத் தேர்தலில் புதிய ஜனநாயக முன்னணியில் களுத்துறை மாவட்டத்துக்கு போட்டியிட்ட வேட்பாளர்கள் பெற்ற விருப்பு வாக்குகளை மீண்டும் கணக்கிட்டு புதிய முடிவுகளை வெளியிடுமாறு பிரதிவாதிகளுக்கு உத்தரவிடுமாறும் மனுதாரர் உயர் நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நீர்க்குழியில் விழுந்து குழந்தை பலி!

கொழும்பு, மார்ச் 08

ஆராச்சிகட்டுவ, வைரம்கட்டுவ பகுதியில் வீட்டுக்கு அருகில் தோண்டப்பட்ட நீர் நிரப்பப்பட்ட குழியில் விழுந்து சிறு குழந்தையொன்று பரிதாபமாக பலியாகியுள்ளது.

இந்த சம்பவம் நேற்று முன் தினம் பிற்பகல் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வைரம்கட்டுவ பகுதியில் வசித்து வந்த 1 வயது குழந்தையே இவ்வாறு உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

குழந்தையின் சடலம் சிலாபம் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. ஆராச்சிகட்டுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் எட்டு பேருக்கு உடனடி இடமாற்றம்!

கொழும்பு, மார்ச் 08

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில்எட்டு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களுக்கு இடமாற்றும் வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, பின்வரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியாட்சகர்கள் இலங்கை பொலிஸ்துறைக்குள் புதிய பிரிவுகளுக்கு புதிய பதவிகளுடன் மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கே.ஜி.பி.பி. சமரபால - கொழும்பு வடக்கு பிரிவின் பொறுப்பதிகாரியாக பணியாற்றுவதோடு மட்டுமல்லாமல், குதிரைப்படை பிரிவின் பதில் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

பி.எம்.கே.டி. பாலிஸ்கரா - குற்றப் புலனாய்வுத் துறையிலிருந்து நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் பதவிக்கு மாற்றப்பட்டார்.

எஸ்.எம்.கே.சி. திலகரத்ன - காலி பிரிவின் பொறுப்பதிகாரியிலிருந்து விநியோகப் பிரிவின் பணிப்பாளராக மாற்றப்பட்டார்.சி.பி. மெதவல - அமைச்சரவைப் பாதுகாப்புப் பிரிவின் பணிப்பாளரிலிருந்து சிறப்புப் பாதுகாப்புப் பிரிவின் பணிப்பாளராக மீண்டும் நியமிக்கப்பட்டார்.

ஏ.ஏ. எதிரிமன்ன - மனித உரிமைகள் பிரிவின் இயக்குநரகத்தில் இருந்து காலி பிரிவின் பொறுப்பதிகாரியாக மாற்றப்பட்டார்.

பி.ஜி. தர்ஷனா - நீதித்துறை பாதுகாப்புப் பிரிவின் இயக்குநரகத்தில் இருந்து சேவைப் பயிற்சிப் பிரிவின் பணிப்பாளராக மாற்றப்பட்டார்.எல்.ஏ.டி. ரத்னவீர - மொனராகலை பிரிவு பொறுப்பதிகாரியிலிருந்து முல்லைத்தீவு பிரிவு பொறுப்பதிகாரியாக மாற்றப்பட்டார்.

கே.என். குணவர்தன - காவல் கடற்படைப் பிரிவின் இயக்குநரிலிருந்து மொனராகலைப் பிரிவின் பொறுப்பதிகாரியாக மீண்டும் நியமிக்கப்பட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர் வீடமைப்பு திட்டம் உருவாக்கப்பட வேண்டும்

## அரசிடம் குகதாசன் எம். பி. கோரிக்கை

கொழும்பு, மார்ச்.08

**திருகோணமலையில் மீனவர் வீடமைப்புத் திட்டம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் வலியுறுத்தியுள்ளார்.**

நேற்று முன்தினம் நடைபெற்ற பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

"மீன்பிடித் துறையில் முதன்மையான ஒரு கூறாக மீன்களைப் பதப்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல் காணப்படுகிறது. மீனவர்களுக்கு இதற்கான தகுந்த பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும். மேலும், மீன்களை பாதுகாக்கும் பொருட்டு பயன்படுத்தப்படும் ஐஸ் கட்டிகள் பெரும்பாலும் தனியார் தொழிற்சாலைகளிலிருந்து பெறப்படுகின்றன. இந்த ஐஸ் கட்டிகள் தகுந்த தரத்தை கொண்டிருப்பதில்லை என்பதோடு விலையும் அதிகமாக வுள்ளது. இதனைத் தடுக்கும் பொருட்டு அரசு, ஐஸ் கட்டி தொழிற்சாலைகளை நிறுவித் தகுந்த தரம் மற்றும் நியாய விலையில் மீனவர்களுக்கு அவை கிடைக்க வழி செய்ய வேண்டும். இதன் மூலம் அரசுக்கும் வருமானம் கிடைக்கும்.

மேலும், கடல் வளங்களை பெறுமதி கூட்டுவதற்கான நடைமுறைகள் சார்ந்த ஒதுக்கீடுகள் எதுவும் இந்த பாதீட்டில் மேற்கொள்ளப்படவில்லை.

ஒலுவில் பகுதியில் கட்டப்பட்டு வரும் மீன்பிடி துறைமுகமானது பல ஆண்டுகளாக முடிவுறாத நிலையில் உள்ளது. இதனை விரைவாக மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவர ஆவன செய்ய வேண்டும்.

திருகோணமலை மாவட்டத்தில் வாழும் கடற்றொழிலாளர்களின் வாழ்க்கைத் தரம் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுகிறது. இவர்களுக்கு தனியான மீனவர் வீடமைப்புத் திட்டம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும். அதற்கான நிதியை அரசு ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

விவசாயிகளுக்கு மானிய விலையில் உரம் வழங்குவதைப் போல மீனவர்களுக்கு மானிய விலையில் எரிபொருள் வழங்குவது மீன்பிடியைக் கூட்ட உதவும். எனவே, இவர்களுக்கு மானிய விலையில் எரிபொருள் வழங்க ஆவன செய்ய வேண்டும்.

திருகோணமலை மாவட்டத்தில் 64, 957 ஏக்கர் நீர்ப் பரப்பை கொண்ட நன்னீர் மீன் வளர்க்கக் கூடிய 437 நீர்நிலைகள் உள்ளன. இவை அனைத்திலும் மீன் வளர்க்க மீனவர்களுக்கு இலவசமாக மீன் குஞ்சுகள் வழங்கி ஆக்கமும் ஊக்கமும் அளிக்கப்பட வேண்டும்.

முற்கூறிய வழிமுறைகள் மூலம் இப்பொழுது திருகோணமலை மாவட்டம் உள்ளிட்ட கிழக்கு மாகாணத்தில் பிடிக்கப்படும் மீனின் அளவை பன்மடங்காக அதிகரிக்க முடியும்"- என்றார்.

(எ)



# மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற உணவு, பானங்கள் கைப்பற்றல்

சாய்ந்தமருது, மார்ச்.08

சாய்ந்தமருதில் மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற உணவுப் பொருட்களும், நிறக்குறியீடு இல்லாத பானங்களும் கைப்பற்றப்பட்டன.

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பல சரக்கு கடைகளில் நேற்றுக் காலை திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி ஜே. மதன் தலைமையில் பொதுச் சுகாதார பரிசோதகர் ஏ.எல்.எம். அஸ்லம் மற்றும் டெங்கு களத்தடுப்புப் பணியாளர்கள் பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர் ஏ. முஸம்மில் முதலானோர் இதில் கலந்து கொண்டனர்.

இதன்போது, மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற நொறுக்கு தீனிகளும், நிறக்குறியீடு இல்லாத பானங்களும் கைப்பற்றப்பட்டன. அத்துடன், கடை உரிமையாளருக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. மக்களின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வது எமது கடமையும், பொறுப்புமாகும். ஆகவே, பொதுமக்கள் உங்கள் முறைப்பாடுகளை உரிய ஆதாரங்களுடன் 0753333453, 0776702703, 077 375 1749 எனும் இலக்கங்களுக்கு அறியத்தாருங்கள் என சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் பொது மக்களை கேட்டுக் கொண்டுள்ளது.

(எ-06)

# துணைவேந்தர் பதவிக்கு 9 பேர் இடையே போட்டி!

ஒலுவில், மார்ச்.08

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக பணியாற்றிய பேராசிரியர் றமீஸ் அபூபக்கரின் முதலாவது மூன்றாண்டு பதவிக்காலம் கடந்த 08 ஆம் திகதியுடன் நிறைவடைந்த நிலையில் புதிய துணைவேந்தர் ஒருவர் நியமிக்கப்படாமல் பதில் துணைவேந்தராக யூ. எல். அப்துல் மஜீத் நியமிக்கப்பட்டிருந்தார்.

புதிய ஆட்சியின் கீழ் குறித்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றுநிருபத்துக்கமைய பல்கலைக்கழக பேரவையின் சார்பில் பதில் பதிவாளர் எம். ஐ. நௌபர், விண்ணப்பங்களுக்கான அழைப்பை கடந்த பெப்ரவரி 06 ஆம் திகதி விடுத்திருந்தார். இதற்கமைய மார்ச் 06 ஆம் திகதி, 03.00 மணி வரை ஒன்பது பேர் விண்ணப்பித்திருந்தனர்.

இதனடிப்படையில், கலாநிதி யூ.எல். அப்துல் மஜீத், பேராசிரியர் றமீஸ் அபூபக்கர், பேராசிரியர் ஏ.எம். றஸ்மி, பேராசிரியர் எம்.ஐ.எஸ். சபீனா, பேராசிரியர் எஸ்.எம். ஜூனைடீன், பேராசிரியர் எப். ஹன்ஸியா றவூப், பேராசிரியர் ஏ.எம். முஸாதிக், பேராசிரியர் ஏ.ஜௌபர் மற்றும் கலாநிதி யூ.எல். செயினுடீன் உள்ளிட்ட ஒன்பது பேர் விண்ணப்பித்துள்ளனர்.

புதிய துணைவேந்தர், பல்கலைக்கழக பேரவையின் விசேட ஒன்றுகூடல் ஒன்றின் ஊடாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றுநிருபத்தில் கூறப்பட்டுள்ளதன் அடிப்படையில் பேரவை உறுப்பினர்கள், விண்ணப்பதாரிகளுக்கு ஏழு அளவுகோல்களின் கீழ் புள்ளிகள் இட்டு, பெற்ற அதிகூடிய புள்ளிகள் அடிப்படையில் மூவரைத் தெரிவு செய்வர். குறித்த மூவரில் ஒருவரை ஜனாதிபதி துணைவேந்தராக நியமிப்பார்.

(எ-06)

# அஷ்ரப் வித்தியாலய மாணவிகள் மாகாண மட்ட போட்டிக்கு தெரிவு

சாய்ந்தமருது, மார்ச்.08

அம்பாறை மாவட்டம் கல்முனை கல்வி வலயத்துக்குட்பட்ட சாய்ந்தமருது லீடர் எம்.எச். எம்.அஷ்ரப் வித்தியாலயத்தில் தரம் 6 இல் கல்வி கற்கும் எம். ஏ.எப். அஸ்பா மற்றும் எஸ்.எப்.எஸ். இமானி எனும் இரு மாணவிகள் கல்முனை கல்வி வலயத்தால் நடத்தப்பட்ட வலய மட்ட ஒலிம்பியாட் போட்டிகளில் வெற்றி பெற்று மாகாண மட்ட போட்டிக்குத் தெரிவாகியுள்ளனர்.

(எ- 06)

# டெங்கு தடுப்பு நடவடிக்கை

சாய்ந்தமருது, மார்ச்.08


அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நேற்று முன்தினம் டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இதன் போது அண்மையில் மருத்துவமனை வீதியில் டெங்கு நோயாளியாக இனங்காணப்பட்டவரின் வீட்டுக்கு களப் பரிசோதனை மேற்கொண்டு அவ்வீட்டின் சுற்றுச்சூழலை அவதானித்ததன் பின்னர் அங்கு டெங்கு நுளம்புகள் பரவக்கூடிய அபாயம் காணப்பட்டமையால் அவ்வீட்டின் உரிமையாளருக்கு எதிராக வழக்குத் தாக்கலும் செய்ய உத்தேசிக்கப்பட்டது.

இதனையடுத்து அவ் வீதியிலுள்ள 20 வீடுகள் பரிசோதனை செய்யப்பட்டன. இந்த டெங்கு தடுப்பு களப்பணிகளில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி ஜே மதன், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் டெங்கு களத்தடுப்பு பணியாளர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது, டெங்கு நோயிலிருந்து பாதுகாப்பதற்கான விழிப்புணர்வு நடவடிக்கைகளும் பொதுமக்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்டன.

(எ)

# இல்மனைட் தொழிற்சாலை ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்




புல்மோட்டை, மார்ச்.08

திருகோணமலை மாவட்டம் புல்மோட்டையில் உள்ள இல்மனைட் தொழிற்சாலை ஊழியர்கள் நேற்று திடீரென ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். கடந்த அரசாங்கத்தால் 83 பேர் நியமிக்கப்பட்டனர். ஆனால், இந்த ஊழியர்களுக்கு கடந்த 9 மாதங்களாக சம்பளம் வழங்கப்படவில்லை.

இந்த நிலையில், தமது குடும்பத்தின் வாழ்வாதா ரத்தையும் ,பிள்ளைகளின் எதிர்காலத்தையும், தமது குடும்ப வறுமையை போக்க தீர்வு வேண்டும் என்றும் கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தங்களுடைய சம்பளத்தை அரசாங்கம் வழங்கும் வரை ஆர்ப்பாட்டம் தொடரும் எனவும் ஊழியர்கள் கூறினர். (எ)




அம்பாறை மாவட்டம் கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி மிகவும் கோலாகலமாக நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது. கல்லூரியின் 125ஆவது ஆண்டு நிறைவை சிறப்பிக்கும் வகையில் பல்வேறு நிகழ்வுகளும் நடைபெற்றன.

படங்கள் :- வி.ரி.சகாதேவராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ விரும்பினால் உடனடியாக பணய கைதிகளை விடுவியுங்கள்

## ஹமாஸ் அமைப்பினருக்கு ட்ரம்ப் இறுதி எச்சரிக்கை

வாஷிங்டன், மார்ச்.08


**பணயக் கைதிகளை விடுவிக்கவில்லை எனில் நீங்கள் மரணமடைந்து விட்டீர்கள் என வைத்துக் கொள்ளுங்கள் என்று ஹமாஸ் அமைப்பினருக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் இறுதி எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

காஸா மீது ஓராண்டாக இஸ்ரேல் நடத்திய தாக்குதல், முதல் கட்ட போர் நிறுத்த ஒப்பந்தம் மூலம் நிறுத்தி வைக்கப்பட்டது. 6 வார கால முதல்கட்ட போர் நிறுத்த ஒப்பந்தமானது, பரஸ்பரம் இருதரப்பு பணயக் கைதிகள் விடுவிப்பின் வழியே அமைதியாக முடிவடைந்தது. எனினும், 2ஆம் கட்ட போர் நிறுத்த ஒப்பந்தம் இன்னும் முடிவு செய்யப்படாமல் உள்ளது.

இந்தச் சூழலில், ஹமாஸ் அமைப்பினரால் விடுவிக்கப்பட்ட இஸ்ரேல் பணயக் கைதிகளை அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் நேற்று முன்தினம் சந்தித்தார். இதன்பின்னர் ட்ரம்ப், சமூக ஊடகத்தில் வெளியிட்ட செய்தியில், பணயக் கைதிகள் அனைவரையும் விடுவியுங்கள். தாமதம் செய்ய வேண்டாம்.

நீங்கள் படுகொலை செய்த நபர்களின் உடல்கள் எல்லாவற்றையும் உடனடியாக ஒப்படையுங்கள். இல்லையெனில் விளைவு உங்களைச் சார்ந்ததே என எச்சரிக்கும் வகையில் பதிவிட்டுள்ளார். இது உங்களுக்கான கடைசி எச்சரிக்கை. ஹமாஸ் தலைமை காஸாவை விட்டு வெளியேறும் தருணம் இது. உங்களுக்கு இன்னும் வாய்ப்புள்ளது.

காஸா மக்களுக்கு அழகானதொரு வருங்காலம் காத்திருக்கிறது. ஆனால், பணயக் கைதிகளை நீங்கள் வைத்திருந்தால் அது இல்லை. அப்படி பணயக் கைதிகள் உங்களிடம் இருக்கிறார்கள் என்றால் நீங்கள் மரணமடைந்து விட்டீர்கள் என வைத்துக் கொள்ளுங்கள் என்று மிரட்டும் தொனியில் தெரிவித்துள்ளார். (எ)



# அயர்லாந்து ஜனாதிபதியுடன் அமைச்சர் ஜெய்சங்கர் சந்திப்பு

டப்ளின், மார்ச்.08

அயர்லாந்து ஜனாதிபதி ஹிக்கின்ஸுடன் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் சந்தித்து பேசினார்.

இங்கிலாந்து மற்றும் அயர்லாந்து நாடுகளுக்கு ஜெய்சங்கர் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார்.

இந்த நிலையில், அயர்லாந்துக்கு நேற்று முன்தினம் சென்ற ஜெய்சங்கர் டப்ளின் நகரில், அந்த நாட்டு ஜனாதிபதி மைக்கேல் ஹிக்கின்ஸை சந்தித்து பேசினார்.

இதுபற்றி ஜெய்சங்கர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், நவீன உலகம் மற்றும் அதன் வளர்ச்சி பற்றிய விவாதங்களில் ஈடுபட்டோம். அதில், அவருடைய கருத்துகளை அவர் பகிர்ந்து கொண்டார். தேசியம் வலுப்படுவதற்கான கலாசாரத்தின் பங்கு பற்றியும் நாங்கள் பேசினோம் என தெரிவித்துள்ளார். (எ)

# 271 ஆயிரம் கோடி பெறுமதியான தங்க படிமம் சிந்து நதி பகுதியில்

## பாகிஸ்தானுக்கு அடித்தது ஜக்பொட்

லாகூர், மார்ச்.08

பாகிஸ்தானின் சிந்து நதி பகுதியில் இலங்கை பெறுமதியில் 271 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான தங்க படிமம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பஞ்சாப் மாகாணம் அட்டோக் மாவட்டத்தில் பாயும் சிந்து நதி பகுதியில் இந்த தங்க படிமம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது அந்த நாட்டு மக்களை உற்சாகத்தில் ஆழ்த்தியுள்ளது.

இந்த தங்க படிமம் பாகிஸ்தானுக்கு ஒரு பொருளாதார உயிர் நாடி மட்டுமல்ல, அதற்கு பக்கத்தில் உள்ள நாட்டுடன் எதிர்பாராத இணைப்பையும் கொண்டுள்ளதாக கூறப்படுகிறது. மேலும் இந்த கண்டுபிடிப்பு, புதிய வளத்தை வெட்டி எடுப்பதற்கான பெரிய திட்டங்களில் ஈடுபட தூண்டுகோளாக அமைந்துள்ளது. இது நெருக்கடியில் உள்ள அந்த நாட்டு பொருளாதாரத்துக்கு ஊக்கத்தையும் நம்பிக்கை உணர்வையும் கொடுத்துள்ளது. (எ)

# உக்ரைனுக்கு உடன் உதவி வழங்க ஐரோப்பிய ஒன்றியம் ஆலோசனை

பிரஸ்ஸல்ஸ், மார்ச்.08

உக்ரைனுக்கு வழங்கப்படும் நிதியுதவி நிறுத்தப்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ள நிலையில், ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்கள் நேற்று முன்தினம் அவசர ஆலோசனை நடத்தியுள்ளனர்.

போரை எதிர்கொண்டு வரும் உக்ரைனுக்கு குறுகிய காலத்தில் உதவ வேண்டிய நெருக்கடி ஐரோப்பிய ஒன்றியத்துக்கு ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் பெல்ஜியம் தலைநகர் பிரஸ்ஸல்ஸில் உள்ள ஐரோப்பிய ஒன்றிய தலைமையகத்தில் அவசர உச்சி மாநாடு நடைபெற்றது. ஜேர்மனியின் அடுத்த ஜனாதிபதி ப்ரீட்ரிக் மெர்ஸ் மற்றும் உச்சி மாநாட்டுத் தலைவர் அன்டோனியோ கோஸ்டா ஆகியோர், ஐரோப்பாவின் பாதுகாப்பை குறுகிய காலகட்டத்தில் பலப்படுத்த வேண்டியது அவசியம் என்றும், உக்ரைனுக்கு உடனடியாக கடன் வழங்குவதற்கு ஏற்ப விதிகளை தளர்த்த வேண்டும் என்றும் தெரிவித்தனர்.

இதற்கிடையில், ரஷ்ய அச்சுறுத்தல்களிலிருந்து ஐரோப்பாவை பாதுகாக்க பிரான்ஸின் அணுசக்தி தடுப்பை பயன்படுத்துவது குறித்து பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன், ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்களுக்கு தெளிவுபடுத்தினார். (எ)

'ஜனநாயக உரிமைகள் துஷ்பிரயோகம்'

# பாதுகாப்பு அத்துமீறலுக்கு இந்தியா கடும் கண்டனம்

லண்டன், மார்ச்.08

லண்டனின் சௌதம் இல்லத்திலிருந்து இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் வெளியேறும் போது, காலிஸ்தான் ஆதரவு போராட்டக்காரர்கள் அவரின் வாகனத்தை மறித்து ஆர்ப்பாட்டம் நடத்தினர். இந்தப் பாதுகாப்பு அத்துமீறலை சுட்டிக்காட்டி 'ஜனநாயக சுதந்திரம் தவறாகப் பயன்படுத்தப்படுவதாக' இந்தியா சாடியுள்ளது.

இங்கிலாந்து அரசுடன் பேச்சுகள் நடத்த லண்டன் சென்ற ஜெய்சங்கர் தனது பயணத்தில் பிரிட்டன் தலைவர்களுடன் பேச்சுக்களை நடத்தினார்.

கடந்த 5 ஆம் திகதி புதன்கிழமை இரவு சௌதம் இல்லத்தில் திங்க் டேங்க் நடத்திய கருத்தரங்கில் பங்கேற்று, "உலகில் இந்தியாவின் எழுச்சியும் பங்களிப்பும்" என்ற தலைப்பில் உரையாற்றினார்.

அமைச்சர் கலந்து கொண்ட நிகழ்ச்சி நடந்த அரங்குக்கு வெளியே கூடி ஆர்ப்பாட்டம் நடத்திய காலிஸ்தான் ஆதரவு போராட்டக்காரர்கள், கைகளில் காலிஸ்தான் கொடிகளை ஏந்தியும், ஒலிப்பெருக்கிகளை வைத்து கோஷமிட்டபடியும் இருந்தனர். இதுகுறித்து சமூக ஊடகங்களில் பகிரப்பட்ட காணொலி ஒன்றில், காலிஸ்தான் ஆதரவாளர் ஒருவர், ஜெய்சங்கரின் காரின் முன்பு நின்று இந்திய தேசிய கொடியைப் கிழிப்பது தெரிகிறது.

இதுகுறித்து இந்திய வெளிவிவகார அமைச்சின் செய்தித் தொடர்பாளர் கூறுகையில்" அமைச்சர் ஜெய்சங்கரின் லண்டன் பயணத்தில் பாதுகாப்பு மீறல் ஏற்பட்ட வீடியோக்களை நாங்களும் பார்த்தோம். இந்தப் பிரிவினைவாத மற்றும் தீவிரவாதக் குழுக்களின் இதுபோன்ற அத்துமீறல்களை கடுமையாக கண்டிக்கிறோம்"- என்றார். (எ)

# "இந்தியா இதுவரை பதிலளிக்கவில்லை"

டாக்கா, மார்ச்.08

முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவை நாடு கடத்தக் கோரி இந்தியாவிடம் கோரிக்கை விடுத்துள்ளோம். ஆனால், இதுவரை பதில் கிடைக்கவில்லை என்று அந்த நாட்டின் இடைக்கால தலைவர் முகமது யூனுஸ் தெரிவித்தார்.

ஷேக் ஹசீனா நாட்டை விட்டு வெளியேறும் முன் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களில் ஈடுபட்டுள்ளார். இது குறித்து அவரிடம் விசாரணை நடத்த வேண்டியுள்ளது. அவர் மட்டுமல்ல, அவருடன் தொடர்புடைய நபர்கள், அவரது குடும்ப உறுப்பினர்கள் உள்ளிட்டோரிடமும் விசாரணை செய்யப்பட வேண்டும்.

பங்களாதேஷில் உள்ள சர்வதேச குற்ற தீர்ப்பாயம் ஹசீனாவுக்கு எதிராக இரண்டு முறை பிடியாணை பிறப்பித்துள்ளது. அவரை நாடு கடத்த கோரி இந்தியாவுக்கு 2 முறை கடிதங்கள் அனுப்பியுள்ளோம். ஆனால், இதுவரை எந்தவொரு அதிகாரபூர்வ பதிலும் கிடைக்கவில்லை. பங்களாதேஷ் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகவில்லையென்றாலும் அவர் வழக்கை சந்திக்க நேரிடும்"- என்றார்.

சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் முகமது யூனுஸ் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். (எ)

# உதயநிதி மீது வழக்கு பதிய தடை!

புதுடில்லி, மார்ச்.08

சனாதன தர்மம் குறித்து சர்ச்சைக்குரிய வகையில் கருத்துத் தெரிவித்த விவகாரத்தில், தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் மீது புதிதாக வழக்குகள் பதியக்கூடாது என்று உச்ச நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

சென்னையில் கடந்த 2023ஆம் ஆண்டு செப்ரெம்பரில் நடைபெற்ற தமிழக முற்போக்கு எழுத்தாளர் சங்க மாநாட்டில் பங்கேற்று பேசிய உதயநிதி ஸ்டாலின், சனாதன தர்மம் குறித்து சர்ச்சைக்குரிய வகையில் கருத்து வெளியிட்டிருந்தார்.

இதையடுத்து உதயநிதி ஸ்டாலினுக்கு எதிராக மகாராஷ்டிரா, இராஜஸ்தான், பீஹார், கர்நாடகா, ஜம்மு காஷ்மீர் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் வழக்குகள் பதியப்பட்டன. இந்த நிலையிலேயே உதயநிதி ஸ்டாலின் மீது புதிதாக வழக்குகள் பதியக்கூடாது என்று நேற்று உச்ச நீதிமன்றம் தடை விதித்துள்ளது. (எ)

# ஹோலி பண்டிகை; முஸ்லிம்களுக்கு தடை

புதுடில்லி, மார்ச்.08

இந்தியாவின் உத்தரப்பிரதேச மாநிலம் மதுரா பிருந்தாவனில் பிரஜ் ஹோலி கொண்டாட்டங் கள் மிகவும் பிரபலமானவை. இங்கு கிருஷ்ண ஜென்ம பூமி கோவில் இருப்பதே இதற்கு கார ணம். இங்கு மார்ச் 13ஆம் திகதி ஹோலி பண்டிகை தொடங்கி ஒரு வாரம் நடைபெறுகிறது. இந்த நிகழ்ச்சிகளில் முஸ்லிம்க ளும் பங்கேற்பது வழக்கம். இதற் குத் தடை விதிக்க உ. பி. பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினரும் இந்துத்துவா அமைப்பினரும் வலியுறுத்தியுள்ளனர்.

இதுகுறித்து மதுரா பா.ஜ.க. எம்.எல்.ஏ. ராஜேஷ் சௌத்திரி கூறும்போது, "இந்து பண்டிகை களில் முஸ்லிம்கள் பங்கேற்பது சமூக முரண்பாடுகளுக்கு வழி வகுக்கிறது. எங்கள் விழாவில் முஸ்லிம்கள் பங்கேற்பதன் மூலம், அவர்கள் 'காதல் ஜிஹாத்' மற் றும் துன்புறுத்தல் போன்ற சம் பவங்களில் ஈடுபடுகின்றனர். இதன் மூலம், முஸ்லிம்கள் இந்து பண்டிகைகளை சீர்குலைக்க முயற்சிக்கின்றனர்" -என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளிர் ஒருநாள் கிரிக்கெட்: நியூசிலாந்து அபார வெற்றி

நெல்சன், மார்ச்.08

மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இலங்கையை வீழ்த்தி நியூசிலாந்து அபார வெற்றி பெற்றது.

இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதல் போட்டி மழை காரணமாக இரத்துச் செய்யப்பட்டது. இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 2ஆவது ஒருநாள் போட்டி நெல்சன் மைதானத்தில் நேற்று நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து 50 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்களை இழந்து 245 ஓட்டங்கள் அடித்தது. அதிகபட்சமாக மேடி கிரீன் சதம் விளாசினார். இலங்கை தரப்பில் சமரி அத்தபத்து 2 விக்கெட்கள் வீழ்த்தினார்.

இதனையடுத்து 246 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய இலங்கை வீராங்கனைகள் ஆரம்பம் முதலே நியூசிலாந்து பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் திணறினர்.

வெறும் 46. 4 ஓவர்கள் மட்டுமே தாக்குப்பிடித்த இலங்கை 167 ஓட்டங்களில் சகல விக்கெட்களையும் பறிகொடுத்தது.

இதன் மூலம் 78 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நியூசி



லாந்து அபார வெற்றி பெற்றது. இலங்கை தரப்பில் அதிகபட்சமாக ஹர்ஷிதா சமரவிக்கிரமா 59 ஓட்டங்கள் அடித்தார். நியூசிலாந்து தரப்பில் ஹன்னா ரோவ் 4 விக்கெட்கள் வீழ்த்தினார்.

இதன் மூலம் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் நியூசிலாந்து 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது. (எ)

## சம்பியன்ஸ் கிண்ணம் இறுதிப்போட்டி நாளை

### இந்தியா - நியூசிலாந்து மோதல்

டுபாய், மார்ச்.08

8 அணிகள் இடையிலான 9ஆவது ஐ. சி. சி. சம்பியன்ஸ் கிண்ணத் தொடரின் இறுதிப்போட்டி நாளை 9ஆம் திகதி டுபாயில் நடைபெறவுள்ளது. இதில் இந்தியா - நியூசிலாந்து அணிகள் மோதவுள்ளன. இந்தத் தொடரில் இந்திய அணி இதுவரை தோல்வியை சந்திக்கவில்லை.

மறுபுறம் நியூசிலாந்து அணி லீக் சுற்றில் இந்தியாவுக்கு எதிராக மட்டுமே தோல்வியடைந்துள்ளது. இதனால் பலம் வாய்ந்த இரு அணிகள் மோதவுள்ளதால் இந்த ஆட்டம் விறுவிறுப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் லீக் சுற்றில் இந்தியாவிடம் தோற்றாலும் இறுதிப் போட்டியில் தாங்கள் வெல்வது உட்பட எது வேண்டுமானாலும் நடக்கலாம் என்று கேன் வில்லியம்சன் கூறியுள்ளார். எனவே, லீக் சுற்றில் சந்தித்த தோல்வியில் கிடைத்த பாடங்களை வைத்து இந்தியாவை வீழ்த்துவோம் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

"டுபாயில் இந்தியா சாதகத்தைக் கொண்டிருப்பது விளையாட்டின் ஓர் அங்கம். அங்குள்ள சூழ்நிலைகள் கண்டிப்பாக நிறைய வித்தியாசத்தைக் கொண்டுள்ளன. ஆனால், அது இயற்கையின் இயல்பு என்று நினைக்கிறேன். உங்களிடம் இருக்கும் எந்தவொரு போட்டியிலும் நிலைமைகள் கொஞ்சம் கொஞ்சமாக மாறும். இந்தியாவுக்கு எதிராக அங்கு நாங்கள் விளையாடிய கடைசி போட்டி மகிழ்ச்சியாக இல்லை"- என்றார். (எ)

## "இந்தியாவுக்கு சாதகமில்லை"

டுபாய், மார்ச்.08

ஒரே மைதானத் தில் ஆடுவது இந்தி யாவுக்கு சாதகம் இல்லை என்று அவுஸ்திரேலிய அணித் தலைவர் ஸ்டீவ் ஸ்மித் தெரிவித்தார்.




9ஆவது ஐ. சி. சி. சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் பாகிஸ்தான் மற்றும் டுபாயில் நடைபெற்று வருகின்றன. பாதுகாப்பு பிரச்னை காரணங்களுக்காக இந்திய அணி பாகிஸ்தானுக்கு செல்ல மறுத்ததால் இந்திய அணிக்குரிய ஆட்டங்கள் அனைத்தும் டுபாயில் நடைபெறுகின்றன.

இந்த நிலையில், அரையிறுதியில் தோல்வியடைந்த அவுஸ்திரேலிய அணியின் தலைவர் ஸ்மித் கூறுகையில்,

இந்திய அணி எங்களுக்கு எதிராக சிறந்த கிரிக் கெட்டை வெளிப்படுத்தியது. எங்களை முற்றிலுமாக வெளியேற்றியது. ஒரே நகரத்தில் (டுபாய்) தங்கியிருப்பது இந்தியாவுக்கு சாதகமானது இல்லை. அந்த அணி திறமையான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறது- என்றார். (எ)

## 6 விக்கெட்களால் மும்பை வெற்றி



லக்னோ, மார்ச்.08

6 விக்கெட்கள் வித்தியாசத்தில் மும்பை இந்தியன்ஸ் அணி அபார வெற்றி பெற்றது.

5 அணிகள் பங்கேற்றுள்ள 3ஆவது மகளிர் பிரீமியர் லீக் தொடர் விறுவிறுப்பான கட்டத்தை எட்டியுள்ளது. இதில் நேற்று முன்தினம் இந்தியாவின் லக்னோவில் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் தீப்தி ஷர்மா தலைமையிலான உ.பி. வாரியர்ஸ் அணி, ஹர்மன்பிரீத் கவுர் தலைமையிலான மும்பை இந்தியன்ஸுடன் மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய உ.பி. வாரியர்ஸ் அணி 20 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 150 ஓட்டங்கள் எடுத்தது. உ.பி. வாரியர்ஸ் தரப்பில் அதிகபட்சமாக ஜார்ஜியா வால் 55 ஓட்டங்கள் எடுத்தார்.

மும்பை அணியில் அமெலியா கெர் 5 விக்கெட்கள் வீழ்த்தினார். தொடர்ந்து 151 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய மும்பை 18.3 ஓவர்களில் 4 விக்கெட்கள் மட்டும் இழந்து 153 ஓட்டங்கள் எடுத்து 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று இந்தத் தொடரில் தனது 4ஆவது வெற்றியைப் பதிவு செய்தது.

மும்பை தரப்பில் அதிகபட்சமாக ஹேலி மத்தியூஸ் 68 ஓட்டங்கள் எடுத்தார். உ.பி.வாரியர்ஸ் தரப்பில் கிரேஸ் ஹாரிஸ் 2 விக்கெட்கள் வீழ்த்தினார். முன்னதாக இந்த ஆட்டத்தில் உ.பி.வாரியர்ஸ் துடுப்பாட்டம் செய்து கொண்டிருந்த போது மும்பை அணி பந்துவீச அதிக நேரம் எடுத்துக்கொண்டதன் காரணமாக கடைசி ஓவரில் 3 வீரர்கள் மட்டுமே உள்வட்டத்துக்கு வெளியே நிற்க வேண்டும் என நடுவர்கள் தெரிவித்தனர்.

இந்த விவரத்தை மும்பை அணித் தலைவி ஹர்மன்ப்ரீத் கவுரிடம் நடுவர் தெரிவித்து கொண்டிருந்தார். அப்போது, துடுப்பாட்டம் செய்து கொண்டிருந்த சோபி எல்லஸ்டோன் நடுவரிடம், ஹர்மன்ப்ரீத்தை காண்பித்து ஏதோ கூறினார். உடனே இதற்குப் பதிலடியாக ஹர்மன்ப்ரீத் கவுர் அவரை பார்த்து ஏதோ திட்டினார்.

இதையடுத்து களநடுவர்கள் அவர்களை சமாதானம் செய்தனர். இதனால் களத்தில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது. (எ)

## இறுதிப் போட்டியில் நியூசிலாந்துக்கே ஆதரவு

### டேவிட் மில்லர் தெரிவிப்பு

லாகூர், மார்ச்.08

"நேர்மையாக கூறவேண்டுமெனில் இறுதிப் போட்டியில் நான் நியூசிலாந்து அணிக்கே ஆதரவு கொடுப்பேன்" - இவ்வாறு டேவிட் மில்லர் தெரிவித்தார்.

ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடரில் லாகூரில் நடைபெற்ற 2ஆவது அரையிறுதி ஆட்டத்தில் நியூசிலாந்து அணியிடம் 50 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்து தென்னாபிரிக்க அணி தொடரிலிருந்து வெளியேறியது.

டேவிட் மில்லர் தனி ஒருவராக போராடி 67 பந்துகளில் சதம் விளாசிய போதிலும் அது வெற்றிக்கு கைகொடுக்கவில்லை.

இந்த நிலையில் இந்தத் தொடரில் தங்கள் அணி ஓய்வு இல்லாமல் டுபாய்க்கும் அதன் பின்னர் பாகிஸ்தானுக்கும் பயணம் செய்த நல்லது அல்ல என டேவிட் மில்லர் கூறியுள்ளார்.

மேலும், இறுதிப் போட்டியில் விளையாடும் இந்தியா, நியூசிலாந்து ஆகிய இரு அணிகளுமே சிறந்தவை.

நியூசிலாந்துக்கு எதிரான அரையிறுதி ஆட்டத்தில் துடுப்பாட்டத்தில் சிறந்த அடித்தளம் கிடைத்தது. துரதிருஷ்டவசமாக ஆட்டத்தின் நடுப்பகுதியில் 2 விக்கெட்களை கூடுதலாக இழந்தோம்.

ஒவ்வொருவரும் தங்களால் இயன்றதைச் செய்ய முயற்சித்தார்கள். இந்தி யாவுக்கு எதிராக மீண்டும் போட்டியில் விளையாடி னால் நன்றாக இருந்திருக்கும்.

ஆனால், வாழ்க்கை சில நேரங்களில் நியாயமாக இருப்பதில்லை. கிண்ணத்தை வெல்ல வேண்டுமானால் கடுமையாக உழைக்க வேண்டும்.

நேர்மையாக கூற வேண்டுமெனில் இறுதிப் போட்டியில் நான் நியூசி லாந்து அணிக்கே ஆதரவு கொடுப்பேன்"- என்றார். (எ)

## சர்வதேச மாஸ்டர்ஸ் லீக் இலங்கை அணி வெற்றி

வதோதரா, மார்ச்.08

சர்வதேச மாஸ்டர்ஸ் லீக் போட்டியில் மேற்கு இந்திய தீவுகள் அணியை வீழ்த்தி இலங்கை அணி வெற்றி பெற்றது.

இந்தியாவில் நடைபெற்று வரும் சர்வதேச மாஸ்டர்ஸ் லீக் ரி - 20 தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் இலங்கை - மேற்கு இந்திய தீவுகள் அணிகள் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்களை இழந்து 173 ஓட்டங்கள் அடித்தது. அதிகபட்சமாக குணரத்னே 64 ஓட்டங்களும், சங்கக்கரா 47 ஓட்டங்களும் எடுத்தனர். மேற்கு இந்திய தீவுகள் தரப்பில் ஆஷ்லே நர்ஸ் 3 விக்கெட்கள் வீழ்த்தினார்.

இதனையடுத்து 174 ஓட்டங்கள் என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய மேற்கு இந்திய தீவுகள் அணியால் 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்களை இழந்து 152 ஓட்டங்கள் மட்டுமே அடிக்க முடிந்தது.

இதன் மூலம் 21 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கை அணி வெற்றி பெற்றது. மேற்கு இந்திய தீவுகள் தரப்பில் அதிகபட்ச மாக டுவைன் சுமித் 49 ஓட்டங்கள் எடுத்தார். இலங்கை தரப்பில் இசுரு உதான 2 விக்கெட்கள் வீழ்த்தினார். (எ)

## இலங்கையில் முத்தரப்பு ஒருநாள் போட்டி தொடர்

கொழும்பு, மார்ச்.08

இலங்கையில் அடுத்த மாதம் முத்தரப்பு ஒரு நாள் போட்டித் தொடர் நடைபெறவுள்ளது.

13ஆவது மகளிர் ஒருநாள் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் இந்தியாவில் நடைபெறவுள்ளது. இந்தப் போட்டிக்குத் தயாராகும் வகையில் இலங்கை கிரிக்கெட் நிறுவனம் முத்தரப்பு ஒரு நாள் போட்டித் தொடருக்கு ஏற்பாடு செய்துள்ளது. இதில் இலங்கையுடன் இந்தியா, தென்னாபிரிக்கா அணிகளும் பங்கேற்கின்றன.

ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் தலா இரு முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் முதல் இரு இடங்களைப் பிடிக்கும் அணிகள் இறுதிப்போட்டிக்கு முன்னேறும். இந்த ஆட்டம் அடுத்த மாதம் (ஏப்ரல்) 27ஆம் திகதி முதல் மே 11ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

தொடக்க ஆட்டத்தில் இந்தியா இலங்கையை சந்திக்கிறது. அனைத்து ஆட்டங்களும் கொழும்பில் உள்ள பிரேமதாஸ மைதானத்தில் நடைபெறவுள்ளன.(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கில்...

வெள்ளிக்கிழமை வடக்குக்கு வருகை தந்து குறித்த தொழிற்சாலைகளுக்கு நேரில் சென்று நிலைமைகளை அவதானித்தனர்.

சுமார் 35 ஆண்டுகளுக்கு மேலாக இயங்காதுள்ள காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையை மீள இயங்கச் செய்வது தொடர்பில் ஆராய்ந்த அமைச்சர்கள் குழு அதனை வடக்கின் பொருளாதார திட்டத்துக்கு பலனளிக்கும் விதமான செயல்பாட்டுக்கு பயன்படுத்த முடியுமா என்பது தொடர்பிலும் கவனம் செலுத்தியது.

இதேபோன்று, பரந்தன் இரசாயன தொழிற்சாலையை மீளவும் அமைத்து - அதனை இயக்குவது தொடர்பிலும் ஆராய்ந்தனர்.

தவிர, ஆனையிறவு உப்பு உற்பத்தி தொழிற்சாலைக்கு சென்ற அமைச்சர்கள் குழு புதிதாக கொண்டுவரப்பட்ட நவீன இயந்திரங்கள் மூலம் உப்பு உற்பத்தி செயல்பாடு முன்னெடுக்கப்படுவதை பார்வையிட்டதுடன் அங்குள்ள தேவைகள் குறித்தும் கவனம் செலுத்தினர். இதேபோன்று அச்சுவேலி கைத்தொழில் பேட்டைக்கும் அமைச்சர்கள் குழு சென்று நிலைமைகளை அவதானித்தது.

அமைச்சர்களுடன் வடக்கு ஆளுநர் நா. வேதநாயகன், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ். சிறீ பவானந்தராஜா, க. இளங்குமரன் மற்றும் மாவட்ட அரச அதிபர்கள், அரச அதிகாரிகள் எனப் பலரும் பங்கேற்றிருந்தனர். (ஐ)

## கிழக்கு...

கொழும்பிலிருந்து மட்டக்களப்புக்கான புலத்தசி பிற்பகல் 3. 15 மணிக்கு புறப்பட்டு நள்ளிரவு 12 மணியளவில் மட்டக்களப்பை வந்தடையும்.

இதுவரை காலமும் 7 மணிக்கு புறப்பட்ட மட்டக்களப்புக்கான பாடும்மீன் கடுகதி புகையிரதம் இனி வரும் நாட்களில் இரவு 11 மணிக்கு புறப்பட்டு அடுத்த நாள் காலை 8:30 மணியளவில் மட்டக்களப்பை வந்தடையும்.

ஏனைய ரயில் சேவைகளில் எந்த மாற்றங்களும் செய்யப்படவில்லை என்று ரயில் திணைக்களம் அறிவித்துள்ளது. (ஐ)

## பெண்...

இருந்தும் மேலதிகாரிகளின் உதவிகளுடன் தப்பிக்கும் நிலைமையும் காணப்படுகின்றது. பெண்களுக்கு எதிரான இத்தகைய செயல்பாடுகளை இல்லதொழிக்க அனைவரும் ஓரணியாகக் குரல் எழுப்பவேண்டும்.

இன்று பெண்கள் சமூகத்தில் குறிப்பாக வேலை தளங்களிலும் பல்வேறு பிரச்னைகளை எதிர்கொள்கிறார்கள். இதற்கு மேலதிகமாக பாடசாலைகளிலும் மாணவிகள் பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்கின்றார்கள். ஊடகங்களை பார்க்கின்ற உங்களுக்கு நிச்சயம் இவை தெரிந்திருக்கும்.

எமது சமூகத்தில் தற்போது இடம்பெறும் சமூகப்பிறழ்வுகளால் அதிகம் பாதிப்புக்குள்ளாவதும் பெண்களே. உயிர்கொல்லி போதைப்பொருளுக்கு அடிமையான ஆண்களால் பல பெண்கள் துர்நடத்தை உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள். சொந்தச் சகோதரிகளைக்கூட அவர்கள் இவ்வாறு துர்நடத்தைக்கு உள்ளான சம்பவங்கள் வடக்கில் பதிவாகியுள்ளன.

வெளியில் இவற்றைச் சொன்னால் தமது எதிர்காலம் பாதிப்புக்கு உள்ளாகும் என அஞ்சி பல பெண்கள் வெளிப்படுத்தத் தயங்குகின்றனர். இவற்றை முறியடிக்க வேண்டும். இறுக்கமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். பெண்களுக்கு எதிராக வன்முறைகளிலோ, துர்நடத்தைகளிலோ ஈடுபடுவர்கள் தராதரம் பாராமல் தண்டிக்கப்பட வேண்டும் - என்றார். (ஐ)

## ரணிலை...

"மிகவும் கவலையான செய்தியுடனே விவாதத்தை ஆரம்பிக்க வேண்டியிருக்கிறது. அண்மையில், இடம்பெற்ற பெரிய வாகன விபத்தொன்று தொடர்பில் இங்கே அறிவிக்க வேண்டியுள்ளது. பெராரி வாகன ஓட்டுநர் உரிமம் இருப்பதாகக் கூறியவர் அல் ஜசீராவுடன் மோதி சேதத்துக்கு உள்ளாகியுள்ளார். அவரின் மூளைக்கு பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது. அவர் இந்த நாட்களில் பல்வேறு கதை களை கூறுகிறார். போக்குவரத்து அமைச்சு மீதான விவாதம் நடக்கும் இந்த நேரத்தில் பெராரி வாகன ஓட்டுநர் உரி மம் இருப்பதாகக் கூறியவருக்கு எங்களின் கவலையை தெரிவித்துக் கொள்கிறோம் - என்றார்.

பிமல் ரத்நாயக்கா கூறியதைக் கேட்டு சபையில் இருந்த எம். பிக்கள் பலத்த சிரிப்பொலி எழுப்பினர்.

முன்னதாக, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் ஊடகங்களை சந்தித்தபோது, "நீங்கள் மீண்டும் பாராளுமன்றம் செல்வீர்களா?", என்ற கேள்விக்கு பதிலளித்த அவர்,

"பெராரி உரிமம் உள்ள ஒருவர், 'எல்' போர்ட் உள்ளவர்களுடன் நேரத்தை செலவிடுவதில்லை" என்று கூறியிருந்தார். இந்த நிலையில் அல் ஜசீரா தொலைக் காட்சிக்கு நேர்காணல் அளித்த ரணில் விக்கிரமசிங்க பல கேள்விகளுக்கு பதில ளிக்கத் திணறியிருந்தார். இதனையே அமைச்சர் பிமல் எள்ளிநகையாடியிருந் தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## யாழ். - திருச்சி...

இதேபோன்று, காங்கேசன்துறையிலிருந்து நாகபட்டினம் செல்வதற்கான கப்பல் சேவை அவ்வப்போது இடையில் நிறுத்தப்படுகின்ற நிலைமை காணப்படுகிறது. நாகபட்டினத்தில் இருந்து வருகை தருகின்ற பயணிகளுக்கான வசதிகள் தொடர்பாக இந்திய அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்துள்ளது.

ஆனால், இங்கு பயணிகளை ஏற்றும் வசதிகள் இல்லை என்று கூறப்படுகிறது. இது தொடர்பாக அமைச்சர் கவனம் செலுத்த வேண்டும். அதனை நவீனமயப்படுத்தி பயணிகள் முனையத்தை புனரமைக்க வேண்டும். பயணிகளுக் கான வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் ஒலுவில் துறைமுகம், ஆரம்பத்தில் வர்த்தகத்துறை சார்ந்த துறைமுகமாக இருப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தாலும் அந்தப் பிரதேச மக்கள் பாதிக்கப்பட்டிருக்கின்ற நிலையில் இந்த ஒலுவில் துறைமுகத்தை மீண்டும் திறத்தல் என்பது கடல் அரிப்புக்கு வழிகோலும் என்னும் அச்சம் மக்களிடம் காணப்படுவதால் அந்த அச்சத்தைப் போக்குவதற்கான திட்டம் ஒன்றை வகுத்து அந்தத் துறைமுகத்தை மீண்டும் செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ஐ)

## மின்தடைக்கு...

நாட்டின் சூரிய மின்சக்தித் துறையில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட நிறுவனங்களையும் 40 ஆயிரம் தொழிலாளர்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் சூரிய மின்சக்தித் தொழில்துறை சங்கம், தொழில்துறையின் எதிர்காலத்தையும் நாட்டின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி இலக்குகளையும் அச்சுறுத்தும் சமீபத்திய நடவடிக்கைகளையும் கடுமையாகக் கண்டிக்கிறது - என்றார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த சங்கத்தின் செயலாளர் சஞ்சீவன் சிவஞானம் -

நாட்டின் வடபகுதியில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் இந்த தொழில் துறையை முன்னெடுக்க முடியாதவாறு பல தடங்கல்களையும் தடைகளையும் இலங்கை மின்சார சபை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன், இது தொடர்பில் பல அமைப்புகளோடும் அரசு துறை அதிகாரிகளோடும் பேச்சுகளை நடத்தி வருகிறோம் - என்றார். (ஐ)

# போக்குவரத்து சபை, ரயில்வேயில் பெண்களை நியமிக்க அரசு முடிவு!

கொழும்பு, மார்ச் 08

இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் ரயில் சேவையில் பெண்களை நியமிப்பதற்கான கொள்கை முடிவு எடுக்கப்பட் டுள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறை முகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றததில் நேற்று நடைபெற்ற வரவு - செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தின் போதே அவர் இதனைத் தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

நாளை (இன்று) மகளிர் தினத்தை முன்னிட்டு, அமைச் சின் அமைச்சர்கள் இலங்கை போக்குவரத்து சபை மற்றும் ரயில்வே சேவையில் பெண்களை நியமிக்க முடிவு செய்துள்ளனர்.

பெண்கள் சில நாட்களில் பஸ் சாரதிகள், விமானிகள் மற்றும் காவலர்களாகப் பணியாற்ற முடியும்.

நாளை (இன்று) மகளிர் தினத்தை முன்னிட்டு இந்த முடிவு எடுக்கப்பட்டது. பாடசாலை பஸ்களை பெண்களுக்கு ஒப்படைக்கவேண்டும் என்ற கனவும் எனக்கு உள்ளது - என்றார். (அ)

## கடன்...

இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் அகியோ இஸோமாட்டா ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

இதுகுறித்து கருத்து வெளியிட்டிருக்கும் ஜப்பான் வெளிவிவகார அமைச்சு,

இரு தரப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதன் மூலம் ஜப்பானுடனான கடன் மறுசீரமைப்பு செயன்முறையை இலங்கை உத்தியோகபூர்வமாகப் பூர்த்திசெய்திருப்பது வரவேற்கத்தக்கது.

"கடன்மறுசீரமைப்பு செயன்முறையின் விபரங்கள் மற்றும் நிபந்தனைகளை உள்ளடக்கியதாக கடந்த 2024 ஜூலை மாதம் இலங்கைக்கும், உத்தியோகபூர்வ கடன்வழங்குநர் குழுவில் அங்கம் வகிக்கும் நாடுகளுக்கும் இடையில் இரு தரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

அதனைத்தொடர்ந்து இலங்கைக்கும், உறுப்புநாடுகளுக்கும் இடையில் இரு தரப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு, அவை பரஸ்பரம் கைமாற்றம் செய்யப்படுவதே கடன்மறுசீரமைப்பு தொடர்பான இரு தரப்பு இணக்கப்பாட்டின் நிறைவு செயன்முறையாகும்.

அத்துடன், இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதியில் அமைந்திருக்கும் இலங்கையின் அபிவிருத்தி மற்றும் மேம்பாடு என்பன ஒட்டுமொத்த இந்து - பசுபிக் பிராந்தியத்தினதும் ஸ்திரத்தன்மைக்கும் சுபீட்சத்துக்கும் இன்றியமையாதவையாகும் - என்றுள்ளது. (ஐ)

## படைகளின்...

மேலும், இறந்தவர்களை நினைவு கூருதலென்பது அந்தந்த சமயங்களுக்கேற்ப மக்கள் செய்து வருவது வழமையாகும். எங்களுடைய மக்கள் வடக்கு, கிழக்கில் நினைவுநாளாக நவம்பர் -27 அன்று துயிலுமில்லங்களிலும், மே-18அன்று முள்ளிவாய்க்காலிலும் நினைவு கூருகிறார்கள்.

கடந்தவருடம் உங்களுடைய ஆட்சியில் தடையில்லாமல் உணர்வு பூர்வமாக நவம்பர் 27 நாளை நிம்மதி யாக நினைவு கூர்ந்தார்கள். துயிலுமில்லங்கள் சிலவற்றில் இராணுவத்தினர் இருக்கிறார்கள். இராணுவத்தினர் எண்ணிக்கையும் வடக்கு, கிழக்கில் அதிகமாகவும் - முல்லைத்தீவில் இன்னும் அதிகமாகவும் இரண்டு மக்களுக்கு ஒரு சிப்பாய் என்றும் உள்ளதாக பலரும் சுட்டிக்காட்டுகின்றனர்.

மக்கள் தங்களுடைய உறவுகளை எண்ணி நினைத்து, ஒருசெட்டுக் கண்ணீர் சிந்தி, தமது மனதை ஆறுதல் படுத்துவதற்கு, இராணுவத்தின் பிடியி லுள்ள முள்ளியவளை, அளம்பில், தேராவில், ஈச்சங்குளம் உள்ளிட்ட வடக்கு, கிழக்கிலுள்ள இன்னும் துயிலுமில்லங்களை விடுவிக்க வேண்டும். வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் சார்பில் இந்தக் கோரிக்கையை முன்வைக்கிறேன் - என்றார்.(ஐ)

## ரணிலின்...

சர்வதேச நாணய நிதியத்துடன் மீண்டும் பேச்சு நடத்த வேண்டும். இவ்வாறான பேச்சை நடத்த மாட்டார்கள் என்பது அரசாங்கத்தின் நடவடிக்கைகளில் இருந்து நன்றாகத் தெரிகிறது. இவ்வாறு போனால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. இவ்வாறே போனால் மற்றுமொரு கடன் மறுசீரமைப்புக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்படும்.

அரசாங்கம் இவற்றை மறைத்து மக்களை முட்டாள்களாக்கியுள்ளது.

குறுகிய காலத்தில் மூன்றாவது முறையாக மக்கள் அபிப்பிராயத்தை கேட்கும் தேர்தல் வரப்போகிறது. இந்தத் தேர்தலுக்கு மத்தியில் அரச ஊழியர்களால் சரியான தீர்மானத்தை எடுக்க முடியும்.

ஐக்கிய மக்கள் சக்தி எப்போதும் தொழிலாளர்களையும் உழைக்கும் மக்களையும் பாதுகாக்கும். உழைக்கும் மக்கள் இல்லாமல் ஒரு நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடியாது. அவர்களை மறந்து நடக்க முடியாது - என்றார். (ஐ)

## கல்வித்துறை...

2026ஆம் ஆண்டு நடைமுறைப் படுத்தப்படும் கல் விச் சீர்திருத்தம், பாடத்திட்டத்தை அறிமுகப்படுத்து தல், மனிதவள அபிவிருத்தி, உட்கட்டமைப்பு அபிவிருத்தி, புதிய கல்விச் சீர்திருத்தங்கள் குறித்து பொது மக்களுக்கு தெளிவூட்டுதல், மதிப்பீடுகளின் அடிப்படையில் மேற்கொள்வதற்கும் இதன் போது திட்டமிடப்பட்டது.

அத்துடன், இது தொடர்பான எதிர்கால நடவடிக்கைகளுக்காக உப குழுக்களை நியமிப்பதற்கும் இதன் போது இணக்கம் காணப்பட்டது.

பாடசாலைகளுக்கு இடையிலான ஏற்றத்தாழ்வை குறைக்கவும், புதிய சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஒவ்வொரு பாடசாலையையும் பற்றி பௌதிக ரீதியாக ஆய்வு செய்து, தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யவும், தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள நிர்மாண பணிகள் தொடர்பில் தேவையான நடவடிக்கை எடுக்கவும், பாடசாலைகளில் உள்ள பாதுகாப்பற்ற இடங்களை கண்டறிந்து அவற்றை உடனடியாக புனரமைத்து அபிவிருத்தி செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளதாக பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

தற்போது நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களுக்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், ஆசிரியர் சமநிலையை பேணும் வகையில் இடமாற்றங்களை மேற்கொள்ளுதல், அதிபர் வெற்றிடங்கள் மற்றும் பதிற்கடமை, மாகாண பாடசாலைகள் மற்றும் தேசிய பாடசாலைகளில் நிலவும் பிரச்சினைகள், கல்வி நிர்வாகத்தில் நிலவும் பிரச்னைகள் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதி கல்வி அமைச்சர் மதுர செனவிரத்ன மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள், பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர, கல்வி அமைச்சின் செயலாளர் நாலக களுவெவ மற்றும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் அதிகாரிகள் மற்றும் அதன் கீழ் உள்ள நிறுவனங்களின் அதிகாரிகள் கலந்துகொண்டனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# கச்சதீவு திருநாளுக்கு ஒத்துழைப்பை சகல பக்தர்களும் வழங்கவேண்டும்!

## யாழ். பதில் அரச அதிபர் கோரிக்கை



யாழ்ப்பாணம், மார்ச் 08

**எதிர்வரும் கச்சதீவு பெருவிழாவுக்கான ஒத்து ழைப்பை சகல பக்தர்களும் வழங்க வேண்டும் என யாழ்ப்பாணமாவட்ட பதில் அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன் வேண்டுகோள் விடுத்தார்.**

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழா தொடர்பான கலந்துரையாடல் நேற்று யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

திருவிழாவுக்கான ஏற்பாடுகள் குறித்து துறைசார் தரப்பினருடன் மேற்கொண்ட கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்தத் தெரிவித்தபோதே மாவட்ட பதில் செயலாளர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எங்களால் வழங்கப்படும் படிவத்தை பூர்த்தி செய்து கச்சதீவில் சமர்ப்பிப்பதன் மூலம் தமது பதிவுகளைப் பக்தர்கள் உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்

இதேநேரம் பஸ் போக்குவரத்துச் சேவையை முன்னெடுக்க இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பஸ் சேவையில் ஈடுபடும் தரப்பினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் கடற்போக்குவரத்து சேவைக்கான கட்டணங்களும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக நெடுந்தீவில் இருந்து கச்சதீவுக்கான ஒரு வழி போக்குவரத்து கட்டணமாக 1000 ரூபாவும், குறிகட்டுவானிலிருந்து ஒரு வழி போக்குவரத்து கட்டணமாக 1300 ரூபாவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப பயணம் செய்கின்ற படகுகள் பரிசோதனை செய்யப்பட இருக்கின்றன.

உணவு, தங்குமிட வசதிகள் கடற்படையினர் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. நெடுந்தீவு பிரதேச செயலகம், நெடுந்தீவு பிரதேச சபை ஆகியவை அந்த பணிகளில் பங்களிக்கும்.ஆலய சூழல் துப்பரவு செய்யப் பட்டுள்ளதுடன் அதற்குரிய வேலைத் திட்டங்கள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இம்முறை விசேடமாக 25 சாரணர்கள் கச்சதீவு ஆலயப் பணிகளில் ஈடுபடுத்தப்படவுள்ளார்கள். அந்த வகையில் அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

பக்தர்கள் சரியான அறிவுறுத்தலை பின்பற்றி கச்சதீவு திருவிழாவில் கலந்து கொள்வதன் மூலம் வீணான அசௌகரியங்களை தவிர்த்துக் கொள்ள முடியும்.

உத்தியோகபூர்வமாக நாங்கள் குறிகட்டுவானில் இருந்து பக்தர்கள் கலந்து கொள்வதற்கான அறிவித்தலை வழங்கி இருக்கின்றோம். இருந்தாலும் சிலர் இலங்கையின் வேறு பிரதேசங்களில் இருந்து நேரடியாக வர வாய்ப்பு இருக்கிறது. அவர்களிடம் நாம் வினயமாக கேட்டுக்கொள்வது முறையாக அந்தந்த பகுதி பங்குகள் மூலம் அறிவுறுத்தலை வழங்கி அந்த இடத் துக்கு வரும் பொழுது அதற்கான பாதுகாப்பு ஏற்பாடு களை கடற்படையினரால் செய்ய முடியும்.

பெருந்திருவிழாவுக்கு இம்முறை இந்தியாவிலிருந்து 4 ஆயிரம் யாத்திரிகர்களுக்கும் இலங்கையின் 4 ஆயிரம் யாத்திரிகர்களுக்கும் அனுமதிக்கப்படவுள்ளதுடன் இரு நாடுகளினதும் அதிகாரிகள் மற்றும் சேவையாளர்கள் என ஆயிரம் பேருமாக 9 ஆயிரம் பேர் வருகை தரவுள் ளனர்.

அந்தவகையில் குறித்த பெருந்திருவிழாவுக்கு வருகை தரவுள்ளவர்கள் ஏற்பாட்டாளர்களால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களை பின்பற்றி எதுவித இடையூறுகளும் இன்றி கலந்து கொள்ளவேண்டும்-என்றார். (அ)

## 14 இந்திய மீனவர்கள் கைது!

மன்னார், மார்ச் 08

மன்னார் தெற்கு கடற்பரப்பில் எல்லை தாண்டி மீன் பிடித்ததாகக் கூறி இந்திய மீனவர்கள் 14 பேரை கடற்படையினர் நேற்று கைது செய்துள்ளனர்.

குறித்த மீனவர்களின் விசைப்படகும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

பறிமுதல் செய்யப்பட்ட படகுடன் கைது செய்யப்பட்ட மீனவர்கள் மேலதிக சட்ட நடவடிக் கைகளுக்காக மன்னார் மீன்வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (அ)

## தேசபந்து தென்னக்கோனின் சிறப்புரிமைகள் இரத்தாகும்?

கொழும்பு, மார்ச் 08

கைது செய்யுமாறு மாத்தறை நீதவான் நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டுள்ள முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனுக்கு வழங்கப்பட்ட கார் மற்றும் பொலிஸ் பாதுகாப்பு உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் நிறுத்தி வைக்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தேசபந்து தென்னக்கோனின் பாதுகாப்பு மற்றும் பிற சலுகைகளை நீக்கக் கோரி, பொலிஸ் தலைமையகத் திலிருந்து ஜனாதிபதியின் செயலாளர் சனத் நந்தித குமாநாயக்கவுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

தேசபந்து தென்னக்கோனுக்கு உத்தியோகபூர்வ இல்லம், உத்தியோகபூர்வ வாகனம்,

அமைச்சரின் பாது காப்புப் பிரிவைச் சேர்ந்த ஆறு அதிகாரிகள், பொலிஸ் சிறப்புப் படையைச் சேர்ந்த இரண்டு அதிகாரிகள் மற்றும் ஊதியச் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. (அ)

# கொழும்பில் புற்றுநோய் சிகிச்சை பெறுவோர் யாழிலும் தம் சிகிச்சைகளை தொடர முடியும்!

கொழும்பு, மார்ச் 08

புற்றுநோயால் பாதிக்கப்பட்டு கொழும்பில் சிகிச்சை பெற்று வரும் நோயாளர்கள் தமது சிகிச்சையை யாழில் தொடர விரும்புமிடத்து அவர்களுக்கு சிகிச்சை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தை வதிவிடமாகக் கொண்ட புற்றுநோயாளர்கள் கொழும்பில் சிகிச்சை பெற்று வருகையில் தமது நலிவுத் தன்மை காரணமாக அல்லது பிரயாணக் கஷ்டம் மற்றும் பணவசதிக் குறைவு காரணமாக தெல்லிப்பளை வைத்தியசாலைக்கு சிகிச்சையைத் தொடர்வதற்காக தமது விருப்பில் செல்லுகையில் அங்கு சிகிச்சை மறுக்கப்பட்டமை தொடர்பில் குற்றச்சாட்டுக்கள் எழுந்தன.

இந்த விடயம் தொடர்பில் புற்றுநோயாளர்கள், மனித உரிமை ஆணைக்குழு மற்றும் சுகாதார அமைச்சு, வெகுஜன ஊடகங்களூடாகவும் முறைப்பாடுகளைக் கொடுத்தும் கடந்த ஒரு வருடமாக போராடினர்.

குறித்த விடயம் தொடர்பில் சுகாதார அமைச்சில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தலைமை யில் கலந்துரையாடல் இடம்பெற்று புற்று நோயாளர் களின் நலன்கள் பூரணமாக பேணப்படும் முறையிலான முடிவுகள் எடுக்கப்பட்டு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

புற்றுநோயால் பாதிக்கப்பட்டு கொழும்பில் சிகிச்சை பெற்று வருகையில் நோயாளர்கள் தமது சிகிச்சையை யாழில் தொடர விரும்புமிடத்து தாம் பெற்ற சிகிச்சை தொடர்பான சகல விவரங்களையும் கடிதத்துடன் எடுத்துச் செல்லுமிடத்து தெல்லிப்பளையில் அங்கு உள்ள மருத்துவ மற்றும் கதிர்வீச்சு வசதிகளுடன் அங்கு சேவையாற்றும் புற்றுநோய் நிபுணர்களின் தீர்மானத்து டன் சிகிச்சை வழங்கப்படும் எனவும் அவர்கள் எவ்வித காரணத்துக்காகவும் திருப்பி அனுப்பப் படமாட் டார் கள் எனவும் உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளது. (அ)

## அடாவடி புரிந்த பஸ் நடத்துநர் சேவையிலிருந்து இடைநிறுத்தம்

கொழும்பு, மார்ச் 08

நுவரெலியா பகுதியில் தமிழ்ப் பாடசாலை மாணவர் களை இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்ஸில் ஏற்ற மறுத்த பஸ் நடத்துநர் சேவையிலிருந்து இடைநிறுத் தப்பட்டுள்ளாரென போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க நேற்று பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

இ.போ.ச பஸ் நடத்துநர் மீது ஒழுக்காற்று விசா ரணை நடத்தப்பட்டு முடியும்வரை அவர் சேவையில் உள்ளீர்க்கப்படமாட்டார் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

பாடசாலை மாணவர்கள் தொடர்பில் விசேட கொள் கையொன்றினை அரசாங்கம் வகுத்திருக்கும் சூழ்நிலையில் இப்படியானவற்றை அனுமதிக்க முடியா தென்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

## வடக்கு-கிழக்கில் எந்த சின்னம்? முடிவில்லை என்கிறது பெரமுன

கொழும்பு, மார்ச் 08

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் வடக்கு, கிழக்கில் எந்தச் சின்னத்தின் கீழ் போட்டியிடுவது என்பது தொடர்பில் இன்னும் முடிவெடுக்கவில்லை எனவும், பங்காளிக் கட்சிகளுடன் கலந்துரையாடல் நடத்தப் பட்டு வருகின்றது எனவும் பொதுஜன பெரமுன கட்சி தெரிவித்துள்ளது.

தேர்தலை எதிர்கொள்வதற்கான மொட்டுக் கட்சியின் ஏற்பாடுகள் தொடர்பில் அக்கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசத்திடம் எழுப்பப் பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மலையகம் உட்பட அனைத்து மாவட்டங்களிலும் போட்டியிடும் நிலைப்பாட்டிலேயே எமது கட்சி உள்ளது. மொட்டுச் சின்னத்தில் களமிறங்கவே எதிர் பார்க்கின்றோம்.

எனினும், வடக்கு, கிழக்கில் சிறு மாற்றம் வரலாம். பங்காளிக் கட்சிகளுடன் பேச்சு நடத்தி வருகின்றோம்.

இவ்விரு மாகாணங்களிலும் சில இடங்களில் மொட்டுச் சின்னத்தில் வருவோம்-என்றார். (அ)

# கைத்தொழில் நிலையங்களின் வினைத்திறன் அதிகரிக்கப்படும்

### யாழில் கூறினார் சுனில் ஹந்துன்நெத்தி

யாழ்ப்பாணம், மார்ச் 08

அனைத்து கைத்தொழில் நிலையங்களையும் மேம் படுத்தி அவற்றின் வினைத்திறனை அதிகரிக்க திட்டமிட்டுள்ளதாக கைத்தொழில் அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி, தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட கைத் தொழில் அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி, அச்சுவேலி கைத்தொழில் பேட்டையை பார்வையிட்டார்.

கைத்தொழில் துறையை மேம்படுத்தும் நோக்கில் குறித்த கைத்தொழில் பேட்டைக்கு அமைச்சர், விஜயம் மேற்கொண்டார்.

இதன்போது அச்சுவேலியில் இயங்கி வரும் மரக்கறி எண்ணெய் உற்பத்தி செய்யும் நிலையத்தைப் பார்வை யிட்டு அதன் செயற்பாடுகள் தொடர்பில் ஊழியர்க ளுடன் கலந்துரையாடினார்.

இந்த விஜயத்தில் கடல்தொழில் அமைச்சர் இ.சந்திர சேகர், நிதி திட்டமிடல் பிரதி அமைச்சர் ஹர்சன சூரிய பெரும, பாராளுமன்ற உறுப்பினர்களான க.இளங்கு மரன், ஸ்ரீ பவானந்தராஜா, யாழ்ப்பாண மாவட்ட பதில் அரசாங்க அதிபர் ம.பிரதீபன், கோப்பாய் பிரதேச செயலர் க.சிவசிறி உள்ளிட்டோர் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி,

அனைத்து கைத்தொழில் நிலையங்களையும் மேம் படுத்தி அவற்றின் வினைத்திறனை அதிகரிக்கும் நோக் கில் குறித்த களப்பணி இடம்பெற்று வருவதாக குறிப் பிட்டார்.

மேலும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் உள்நாட்டு முதலீட்டாளர்கள் இன, மத, மொழி பேதங்களைக் கடந்து அனைவரையும் உள்வாங்கி பாரிய தொழில் முயற்சிகளை மேற்கொள்வதற்கு தாம் தயாராக உள்ளதா கவும் அவர் தெரிவித்தார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 08.03.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org